Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 24 புதன்கிழமை (06.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 249


ஆதிக்க சக்திகளிடம் விசுவாசமும்... 11



நீங்கள் எப்படிப்பட்டவர்? 10



அது அரசியல் சர்வாதிகாரம் 12



148 பேர் பலி 16



பௌத்தத்தில் இருந்து வெளியேற்று 03




## சனல்-4 ஊடகவியலாளர் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)



பிரித்தானியாவை தளமாகக் கொண்ட சனல்- 4 தொலைக் காட்சி சேவையின் ஆசிரியரும் தொகுப்பாளருமான சிராணி சபாரட்ணம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையை வந்தடைந்த போது, அவர் இலங்கை சட்ட அமுலாக்க அதிகாரிகளினால் விமான நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டு மீண்டும் பிரித்தானியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் எனக்கூறிய அந்த வட்டாரங்கள், பிரித்தானியாவிலிருந்து டுபாய் ஊடாக இவர் இலங்கைக்கு வந்ததாகவும் கூறியுள்ளன. இவரின் பெயர் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில் இவர் தடுத்துவைக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டுள்ளார். இலங்கையின்

19 ஆம் பக்கம் பார்க்க

## துப்பினால் தண்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக் குற்பட்ட முக்கிய பகுதிகளில் வெற்றிலை துப்பினால் தண்டம் அறவிடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 29 ஆம் திகதி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நகரசபைத் தலைவர் இ. தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

நகரின் பஸ் நிலையம், மற்றும் சந்தையின் உட்புறம், வெளிப்

19 ஆம் பக்கம் பார்க்க

## புதைக்கப்பட்ட சிசு சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிழக்கு சுன்னாகம் பகுதியில் 47 வயது தாயாரினால் பிரசவிக்கப்பட்டு பின்னர் புதைக்கப்பட்ட ஒன்பது மாதச் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி வீடொன்றில் நேற்று முன்தினம் தாயார் சிசுவைப் பிரசவித்தபோது அதீத இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. பிரசவித்த குழந்தையின் தொப்புள் கொடியை இழுத்து அறுத்த வேளையே தாயாருக்கு அதீத இரத்தப் போக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.நகரில் மோதல்; நால்வருக்கு வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

முன் விரோதத்தினால் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி வாள் வெட்டில் முடிவடைந்துள்ளது.

யாழ்.கன்னியர் மடத்தடி தேவரிக்குளம் பகுதியில் நேற்று நண்பகல் நேரம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஆஸ்பத்திரி வீதிப் பகுதியைச் சேர்ந்த தேவராஜன் கவிதா (வயது-26) கழுத்தில் வெட்டப்பட்ட நிலையிலும், தேவரிக்குளம் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் (வயது-56), வேலாயுதம் பகீரதன் (வயது-26), விக்னேஸ்வரன் (வயது-28) ஆகிய நால்வர் வெட்டுக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

கடந்த மாதம் இடம்பெற்ற வாக்குவாதத்தின் தொடர்ச்சியாக குறித்த பகுதி இளைஞர் ஒருவருடன் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வீதியில் நின்று சண்டை போட்டுள்ளார்.

சண்டையின் உச்சக்கட்டத்தில் குறித்த விக்கி என்ற இளைஞர் ஒரு வீட்டில் தந்தையாரையும், மகனையும் வாளால் வெட்டியதுடன், மற்றைய அயலில் உள்ள வீட்டில் தனியாக இருந்த யுவதியை வீட்டில் உட்புகுந்து கழுத்தில் வெட்டியுள்ளார்.

அதனை அறிந்த தேவரிக்குள இளைஞர் வாளால் வெட்டியவரைத் தாக்கியுள்ளார். இரு பகுதிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் சம்பந்தப்படாத யுவதி வெட்டுக் காயங்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவிலும், வெட்டியவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)



காணாமல் போன ஊடகவியலாளர் எக்னெலிகொட தொடர்பில் ஐக்கிய நாடுகள் மாநாடொன்றில் உரையாற்றும் போது முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் கருத்து தெரிவித்தருந்தார். அது தொடர்பில் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் அவர் நேற்று சாட்சியமளித்த போது...

## எரிபொருள் விலை குறைப்பு ஆராய்கிறது அரசு

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருள் விலை தொடர்ந்து குறையுமானால், இலங்கையிலும் எரிபொருள்விலை குறித்து கவனத்தில் கொள்ளப்படும் என பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

உலக சந்தையில் தற்போது எரிபொருள் விலை குறைவாக உள்ளதால் இலங்கையிலும் எரிபொருள் விலை குறைக்கப்படுமா என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பொன்சேகாவின் உரிமைகளை மீட்க சர்வதேச நாடாளுமன்றில் முறையீடு

(கொழும்பு)

அண்மையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுக்க சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் செயலாளர் ரொஜர் ஹுசேங்காவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்தன முறையீட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பின் 34ஆவது படியான அதிகாரங்களைப் பயன்படுத்தி சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய அனுமதி அளித்திருந்தார். அதன்படி நீதியமைச்சின் செயலாளரால் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திற்கிணங்க கடந்த மாதம் 21 ஆம் திகதி ஜெனரல் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டார்.

எனினும், சரத் பொன்சேகா

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரித்தானிய மாநகர முதல்வராக இலங்கையர் தெரிவு

பிரித்தானிய ஹரோ மாநகர முதல்வராக இலங்கை வம்சாவளி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் ஹரோ மாநகரசபையின் உறுப்பினராக பல் ஆண்டுகளாக செயற்பட்டு வந்த நிசாம் இஸ்மாயில் என்பவரே அந்த மாநக ரசபையின் முதல்வராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பிரித்தானிய வரலாற்றில், இவரே முதலாவது இலங்கை வம்சாவளி முஸ்லிம் மாநகர முதல்வர் என்று பிரித்தானிய செய்திதாள் ஒன்று தெரிவித்துள்ளது.

## பாரிந்துரை அமுலாக்கம் திட்ட அறிக்கை

### அமெரிக்காவுக்கு வழங்கவில்லை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையை செயற்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுக்கு எந்த ஒரு செயற்திட்ட அறிக்கையையும் வழங்கவில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரை நிகழ்த்திய போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க எழுப்பிய வாய் மூல

19 ஆம் பக்கம் பார்க்க

## ஒரே நேர் கோட்டில் சூரியன்-வெள்ளி-பூமி

### பார்ப்பதை தவிர்க்க ஆலோசனை

(கொழும்பு)

சூரியன், வெள்ளி மற்றும் பூமி ஆகியன ஒரே நேரத்தில் ஒரே கோட்டில் சந்திக்கும் விசேட கிரக மாற்றத்தை பார்வையிடுவதற்கான அரிய சந்தர்ப்பம் இன்று காலை இலங்கையர்கள் உள்ளிட்ட உலக மக்களுக்கு கிட்டவுள்ளது. 100 வருடங்களுக்கு ஒருமுறை தென்படும் அரிய சந்தர்ப்பம் இதுவென கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

சூரியனின் ஊடாக பயணிக்கவுள்ள வெள்ளி கரும் புள்ளியாக தென்படும் எனவும், இது சுமார் ஏழு. மணித்தியாலங்களுக்கு பயணிக்கும் எனவும் அவர் கூறினார். இதனை சூரிய உதயத்தில் இருந்து பார்வையிடக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாகவும் பேராசிரியர் தெரிவித்தார்.

அத்துடன் சூரியனுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# வடிகால் அமைக்கும் பணி மந்தகதியில் விரைவில் புனரமைக்க கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வட்டு. தெற்கு கொட்டி சுட்டி கிராமமானது மிக நீண்ட காலமாக நீர் வழிந்தோடும் இடமாக காணப்பட்டு வருகிறது. மழை காலங்களில் கிராமம் முழுவதும் வெள்ளக்காடாக காணப்படும் இங்கு காணப்பட்ட மதகு சிதையுண்டு காணப்படுகின்றது.

இது சிதையுண்டு நிலத்துடன் மறைந்து விட்டது. எனினும் இம் மதகானது சில ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டு இருந்தது.

வெள்ள நீர் தேக்கத்தை கருத்தில் கொண்டு வெளிநாட்டு தொண்டு நிறுவனமாகிய வேள்ட் விசன் நிறுவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி இதனை புனரமைப்பதற்கு உதவி பெறப்பட்டு ஒரு கட்டமாக புனரமைப்பு பணி நிறைவடைந்து இரண்டாம் கட்டப் பணியானது ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் பணிகள் ஆமை வேகத்தில் நகர்கின்றதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனை குழப்புவதற்கு சிலர் முயன்று வருகின்றதாகவும், இது தொடர்பான தகவல்கள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி அதனை குழப்புவதற்கு முயன்றுள்ளனர். மேலும் இது தொடர்பாக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மழை காலம் நெருங்குவதால் இதனைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கொட்டி சுட்டி மக்கள் தெரிவிக்கின்றனர். 2011 ஆம் அண்டில் பெறப்பட்ட திட்டமானது இது வரையும் புனரமைப்பு முடிவடைய வேண்டிய காலத்தை தாண்டியும் முடிவடையவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

மேலும் ஒரு சிலரது நடவடிக்கையினால் இத்திட்டம் நிறுத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் குடிநீர் தாங்கி ஒன்று ஒரு கோடியே 30 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் குடிநிர் பிரச்சினை தீர்க்கப்படுமென தெரிவித்துள்ளனர்.

## விழிப்புணர்வு கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களுக்கு வெடி பொருட்கள் பற்றிய விழிப்புணர்வுக்கூட்டம் நேற்று நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

நெடுந்தீவு கடற்படை கட்டளைத் தளபதியின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வுக் கூட்டத்தில் பொலிஸார், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (85)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவிருந்த நல்லூர் வரலாற்றுக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புத்த ஜாதகக் கதை கண்காட்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் 571 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பொசன் நிகழ்வை முன்னிட்டு மாபெரும் கண்காட்சி நேற்று முன்தினம் இரவு ஆரம்பமாகியுள்ளதுடன் தொடர்ந்து 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இக்கண்காட்சியில் லோசக புராண ஜாதகம் கதை ஒரு இலட்சம் மின்குமிழ்களைக் கொண்டு மிகப் பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சி நிகழ்வினை ஏராளமான மக்கள் குறிப்பாக மூவின மக்களும் பார்வையிட்டு வருகின்றனர். அத்துடன் இராணுவத்தினரால் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. (77)



வடமாகாண எழுத்தாக்கப் போட்டியில் 1 ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட யா/பண்ணாகம் மகா வித்தியாலய மாணவன் அ.வெற்றிகரனிற்கு வடமாகாண பண்பாட்டு கல்வி விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பரிசில் வழங்கு வதைக் காணலாம்.

# பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் பட்டதாரி பயிலுனர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள 3 ஆயிரம் பட்டதாரிகள், பட்டதாரி பயிலுனர், நேர்முகப் பரீட்சையில் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த 3 ஆயிரம் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையில் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஆயிரம் பேர் தோற்றியுள்ளனர்.

மிகுதி 2 ஆயிரம் பேரில் இன்று ஆயிரம் பேருக்கும் நாளை ஆயிரம் பேருக்கும் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

3 ஆயிரம் பேரும் 6 மாதம் அரச திணைக்களங்களில் அந்தந்தத் துறைகளில் பயிலுனராக கடமையாற்றிய பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த 6 மாதத்தில் 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது. (எஸ்)

## சட்டவிரோத கள்ளு விற்பனை மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கள்ளு விற்பனையில் ஈடுபட்ட மூவர் மதுவரி உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மதுவரி நிலைய பொறுப்பதிகாரி என். கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவுப் பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் வீட்டில் ஒளித்து வைத்து கள்ளு விற்பனையில் ஈடுபட்ட வேளை பிடிககப்பட்டவர்கள் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்)

# சிங்கள மொழி வகுப்பு ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினரால் 2012 ஆம் ஆண்டுக்கான கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிங்கள மொழிப் பயிற்சி நூலக மண்டபத்தில் இன்று பி.ப 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் மொழி வளவாளராக சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் வளவாளரும் உள்ளூராட்சி அமைச்சின் தற்போதைய நிர்வாக உத்தியோகத்தருமான வே.சிவராஜலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே சிங்கள மொழியை கற்க விரும்பும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்து பயனடையுமாறு நூலகரும் நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபை செயலாளருமான திருமதி ர.கோவர்த்தன் அறிவித்துள்ளார். (11)

# புதிய ஆணையாளர் பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு புதிய ஆணையாளராக செ.பிரணவநாதன் நேற்று புதிதாக பதவி ஏற்றுள்ளார்.

இவர் உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாநகர சபை ஆணையாளராக கடமையாற்றிய மு.செ.சரவணபவவின் பதவிக் காலம் முடிவடைந்ததை தொடர்ந்து புதிய ஆணையாளராக செ.பிரணவநாதன் கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

# அனுமதியற்ற வியாபாரம் நீதிமன்றில் வழக்கு

(யாழ்ப்பாணம்)


வலி. மேற்கில் வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் மருத்துவ சான்று இன்றி சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் வாகனமொன்றில் குளிர்பானப் பொருட்கள் பொது சுகாதாரப் பரிசோதகரினால் பறிமுதல் செய்யப்பட்டு குறித்த நபர்கள் மல்லாகம் நிதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வழக்கம்பரை வீதியால் மேற்படி குளிர்பான பொருட்களை விற்பனை செய்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலும் இதற்கு முன்னர் குறித்த நபர்கள் ஒரு தடவை எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீதான வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி விசாரனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேறுடைய மஞ்சம் பாரீர்



பெரிய சந்நியாசியாரின்
பேறுடைய மஞ்சம்,
பேராசை விட்டவர்க்குப்
பெருகுமே நெஞ்சம்,
அரிய பொக்கிஷங்களோ
அற்புதமாய் விஞ்சும்,
ஆற அமர இருந்து பார்
ஆன்மீகத்திற்கதுவே தஞ்சம்.
கே.எஸ்.சிவஞானராஜா

# அமரர் சிவசிதம்பரத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அன்னாரது படத்திற்கு நினைவுச் சுடரை வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் நாகரஞ்சினி ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அன்னாரது திருவுருவப் படத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மாலை அணிவித்தார். தொடர்ந்து தந்தை செல்வநாயகத்தின் உருவச்சிலைக்கு யாழ். மாநகர எதிர்க்கட்சி உறுப்பினர் செங்கையா அணிவித்தார்.

அமரர் நமசிவாயத்தின் உருவப்படத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் முகுந்தன் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலர் அஞ்சலி இடம்பெற்றது.

தொடர்ந்து நினைவுரைகளை யாழ். வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் நாகரஞ்சினி, எதிர்க்கட்சி உறுப்பினர் செங்கையா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் முகுந்தன், செல்லன் கந்தையன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் அரசகுலசிங்கம் ஆகியோர் ஆற்றினர்.

## மண்ணெண்ணெய் விநியோகம்

(வேலணை)

தீவகத்தில் மண்ணெண்ணெய்க்கான நிவாரண முத்திரை வழங்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறுகின்றது.

இவ்விநியோகம் வேலணைப் பிரதேசத்தில் 3420 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (85)

பெண்களை ஆண்கள் காவல் புரிவதால்
பெண்மை தாழ்ந்ததன்று. வன்மை இரும்புப்பெட்டி மென்மை தங்கத்தை காப்பாற்றுகிறது.
தங்கம் தாழ்ந்ததென உலகம் கருதுகிறதா?

\- வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## துரித உணவு குறைப்பீர்!

குடிக்கும் நீரில் நஞ்சு, உண்ணும் உணவில் நஞ்சு, சுவாசிக்கும் காற்றில் நஞ்சு என்றாகிவிட்டது நம் சூழல். நாசூக்கான அவசரமான நவீன வாழ்க்கை முறைக்கு நாம் தந்து கொண்டிருக்கும் விலை இந்தச் சுற்றுச்சூழல் பாதிப்பு.

போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரும், கையை வாயைக் கழுவாமலே நின்ற நிலையில் கடித்துவிட்டு ஓடக்கூடிய உடன் தயாரிப்பு உணவு வகைகளுமே கதியாகி விட்டது. இன்னும் இன்னும் என்று துரித வளர்ச்சியை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்கு தானியங்கள் காய்கறிகளின் சாதாரண விளைச்சல் போதவில்லை. மரபணுவை மாற்றியும் விளைச்சலைப் பெருக்குகிறோம்.

விளையும் பயிர்களிலேயே நஞ்சு கலந்துவிடுகிறது. இதனால், உண்ணும் உணவே விஷமாகிவிட்டது. விளைச்சலில் விஷம் கலப்பதை நிறுத்த முடியவில்லை. இரசாயனத்தில் விளைந்த காய்கறிகள் – பழங்கள் – தானியங்களையே உண்ண வேண்டியிருக்கிறது.

விதம் விதமான துரித உணவு வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு கடைகளில் குவிந்தவண்ணம் உள்ளன. சமையல் இல்லாமல் அதாவது சமையலறைக்குச் செல்லாமல் பல மாதங்களுக்கு முன்பே சமைக்கப்பட்டதும் கெடாமல் இருக்க இரசாயனங்களும் சேர்க்கப்பட்ட பொதி உணவுகள் இவை. இவற்றிலும் உரம், கிருமிநாசினிகளின் விஷமும் அதற்கு மேல் வேறு ஆபத்துகளும் உண்டு.

ஒரு மனிதன் நலமுடன் வாழ சராசரியாக 2,200 கலோரி உணவு போதும். இந்தக் கலோரி 300 கிராம் காபோவைதரேற், 6 கிராம் உப்பு, 20 கிராம் சாதாரண கொழுப்பு மற்றும் 2 கிராம் கரையாத கொழுப்பு ஆகியவற்றில் கிடைத்துவிடும். தானியங்கள், பருப்பு வகைகளில் புரதச்சத்து உண்டு. காய்கறி – பழங்களில் விற்றமின் சத்துக்களும் தேவையான நார்ச்சத்தும் கிட்டும்.

ஃபாஸ்ட் ஃபுட் உணவுகளில் புரதம், நார்ச்சத்து, விற்றமின் எதுவுமே இல்லை என்பதுடன், அனுமதிக்கப்படும் அளவுக்கு மேல் உப்பும், கரையாத கொழுப்பும் உள்ளதால் மனித ஆயுளை குறைத்து, உடல் மருந்துக்கு அடிமையாகவும் நேர்கிறது.

ஜாம், ஜெலி, சீஸ், ஊறுகாய் போன்ற துரித உணவுகளில் பென்சோட் என்ற நச்சு சேர்க்கப்படுகிறது. பூச்சி மருந்துகளிலும் பென்சோட் உண்டு. அடைக்கப்பட்டு விற்கப்படும் இறைச்சிகளில் நைட்ரேற் சேர்க்கப்படுகிறது. பாண், பணிஸ், கேக் போன்றவற்றில் சோடியம் பென்சோட் சேர்க்கப்படுகிறது. வெள்ளை நிறம் பெற சல்ஃபைற்றும், சிவப்பு – மஞ்சள் – பிங்க் நிறம் பெற அலுமினியம் குரோமைற் என்ற விஷப்பொருளும் சேர்க்கப்படுகிறது.

கேசரி பவுடர் என்ற பெயரில் குரோமைற் விற்கப்படுவதால் அதை வாங்கி அல்வாவிலும் கேசரியிலும் சிவப்பு நிறத்துக்குப் பயன்படுத்துகிறோம். உருளைக்கிழங்கு சிப்ஸ்களில் புட்டிலேற்றட் ஹைட்ரொக்சினேற் சேர்க்கப்படுகிறது. சோடியம் பைகாபனேற் என்ற சமையல் சோடா சேர்க்கப்படாத பொருளே இல்லை. இதுவும் அளவுக்கு அதிகமானால் நோய்தான்.

இது அவசர உலகம். நல்லுணவை நல்ல விதமாகச் சமைக்கக்கூடிய வயதானவர்களை வீட்டில் வைத்திருக்கவே பஞ்சிப்படுகிறோம். ஜங்க் ஃபுட் – அதாவது கெட்ட உணவை விலை கொடுத்து வாங்கி நோயுறுகிறோம். நமது சுலபத்திற்கு கடைகளில் கிடைக்கும் துரித உணவைவிட நமது சமையலறை உணவுதான் நல்லது. நாம் புரிந்துகொண்டு மாற்றிக்கொள்ள வேண்டிய எத்தனையோ விஷயங்களில் இதுவும் ஒன்று.

\- ஆசிரியர்

# பௌத்த மதத்திலிருந்து மேதானந்தாவை ஒதுக்குக

## ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

பௌத்த மதத்திலிருந்து எல்லாவெல மேதானந்த தேரரை ஒதுக்க நடவடிக்கைகளை மகாநாயக்க தேரர்கள் மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கும் புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர, தர்ம இராஜ்ஜியத்தை உருவாக்கவென வந்தவர்கள் இன்று தமது இராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருப்பதாகவும் விசனம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் எங்கெல்லாம் புராதனச் சின்னங்கள் புதைக்கப்பட்டிக்கின்றது என்பது தொடர்பில் ஊர் ஊராகச் சென்று தகவல்கள் சேகரிக்கும் மேதானந்ததேரர், அத் தகவல்களை அரசாங்கத்திற்கு வழங்கி அவற்றை கொள்ளையடிப்பதற்கு உதவி செய்கிறார்.

அத்தோடு இவர் கையில் பச்சை குத்தியுள்ளார். எனவே தான் மஞ்சள் அங்கியால் அதனை மறைத்துக் கொண்டுள்ளார். இது தர்மத்திற்கு எதிரானதாகும.

புராதன சின்னங்களை காட்டிக் கொடுக்கும் மேதானந்த தேரர் ஒருபுறம் மறபுறம் பிட்ட தூவே சிறிதம்ம தேரர் ஆகியோர் பௌத்த தர்மத்திற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

எனவே மகா நாயக்க தேரர்கள் இத் தேரர்களை பௌத்த சாசனத்திலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டும்.நாட்டில் தர்ம இராஜ்ஜியத்தை உருவாக்கப் போவதாக ஹெல உறுமய பிக்குமார் இன்று தமக்கான சுகபோக இராஜ்ஜியங்களையும் மாளிகைகளையும் கட்டியெழுப்பி வருகின்றன .என்றார்.

# சவுதி சிறைகளிலுள்ள இலங்கையர்கள் சிரமம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மலாஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காக பெருமளவிலான இலங்கையர்கள் அந்த நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து இலங்கைத் தூதரகத்திற்கு அறிவித்துள்ளபோதிலும் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என இலங்கை பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார தெரிவிக்கையில் இந்தப் பணியாளர்களின் பிரச்சினைகள் குறித்து உடனடி கவனம் செலுத்தப்படும் என்று கூறினார்.

சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக அதிபர்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச தரத்தில் தாதியர் பயிற்சிக் கல்லூரி

(கொழும்பு)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற தாதியர் பயிற்சிக் கல்லூரியினை கொழும்பில் அமைப்பதற்கு சவுதி அரேபியா நிதி வழங்கியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் சவுதி அரேபியாவும் இணைந்தே இந்தப் பயிற்சிக் கல்லூரியினை ஆரம்பிக்கவுள்ளன. இதற்கான ஒப்பந்தம் கடந்தவாரம் சவுதி அரேபியாவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த தாதியர் பயிற்சிக் கல்லூரி 40 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கட்டப்படவுள்ளது.

பல்வேறு வசதிகளைக் கொண்ட இலங்கையின் முதலாவது பயிற்சிக் கல்லூரியாக இது அமையும் எனவும் 100 படுக்கை அறைகள், தொழிநுட்ப ஆயவு கூடங்கள் என்பனவும் இந்த பயிற்சிக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இங்கு பயிற்சி பெறும் தாதியர்களுக்கான வெளி நாட்டு வேலை வாய்ப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பவுள்ளது.

# அடிப்படை வசதிகளின்றி வாழும் மாசார் கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாசார் கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேறி 2 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இங்கு 180 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் இப்பிரதேச மக்கள் தமக்கு இதுவரை வீட்டுத்திட்டம் எதுவும் வழங்கப்படவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே வீட்டுத்திட்டம் முன்னர் வழங்கப்பட்டு குறையாக இருந்த மக்களுக்கே தற்போது 3 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் எதுவும் வழங்கப்படாதுள்ளதுடன், தற்காலிக வீடுகளும் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை இக்கிராமத்திலுள்ள உள்ளூர் வீதிகளும் புனரமைக்கப்படாது குண்டும், குழியுமாக சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்துக்களில் நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

குடிநீர் வசதிகளும் ஓரளவாக இருக்கின்ற போதிலும், பொதுக்கிணறுகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் மின்சார விநியோகம் அயல் கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், இக்கிராமத்திற்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் இதனால் பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் இக்கிராமத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் வாழ்ந்து வருவதாகவும் இவர்களுக்கான சுயதொழில் உதவிகளும் பெற்றுக் கொடுக்கப்படாததால் இவர்கள் வாழ்வாதார ரீதியாக கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராம மக்களின் அடிப்படை வசதிகளை ஓரளவேனும் நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(04)

# கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இத்திணைக்களத்தில் 23 பதவி வெற்றிடங்கள் நிலவுவதால் இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை மும்மொழிகளிலும் நடத்தப்படவுள்ளதுடன் 25 மாவட்டங்களிலும் பரீட்சை நடத்தப்படும் எனவும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை எதிர்வரும் யூலை மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012 எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள் தொடர்பான மேலதிக விபரங்களை 01.06.2012 வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

# இளந் தலைமுறையினருக்கு விழிப்புணர்வூட்டுவது அவசியம்

## ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன்



கொடிய யுத்தம் முடிவடைந்து தற்போது அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டுள்ள போதிலும், குடாநாட்டின் மூலை முடுக்குகளில் அபாயகரமான வெடிபொருட்கள் இன்னமும் மறைந்திருப்பதால், அப்பாவிச் சிறுவர்கள் அவற்றினை எடுத்து விளையாட முற்படும்போது அவற்றிறகு பலியாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படடுள்ளமை அனைவருக்கும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

முன்பள்ளிகளில் கல்வி பயின்று வரும் பச்சிளம் சிறார்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் இத்தகைய வெடிபொருட்கள் பற்றிய விழிப்பூட்டல்களை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதுடன், இதில் சமூகத்திலுள்ள பொது அமைப்புகள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் என அனைவரும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

நேற்றுமுன்தினமும் நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் தர்மகுலசிங்கம் ரூபன் என்னும் 14 வயது பாடசாலை மாணவனின் மரணத்திற்கும் கடற்கரையில் காணப்பட்ட அநாமதேய வெடிபொருளே காரணம் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், அம்மாணவனின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் பெற்றோருக்கும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள் கின்றது.

யுத்தம் நிறைவடைந்து 3 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் இன்னமும் வெடிபொருட்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவிக்கிடப்பதும், கடற்கரைகளில் அவ்வப்போது ஒதுங்குவதும், அவற்றிற்கு மககள் பலியாவதும் தொடர்கதையாகவே உள்ளது. இத்தகைய நிகழ்வுகளை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, எதிர்காலத்தில் இவற்றினை தடுத்து நிறுத்துவது குறித்து ஆராய்ந்து செயற்பட வேண்டியதின் அவசியத்தை ஈழமக்கள் ஜனநாயக கட்சி சுட்டிக காட்ட விரும்புவதுடன், மாணவாகள், சிறுவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் வெடிபொருட்கள் பற்றிய விழிப் புணர்வை சமூகத்தில் அக்கறை கொண்டவாகள் ஏற்படுத்த முன்வருவதுடன், இதில் பாதுகாப்புத் தரப்பினரும் கூடிய கவனம் செலுத்துவது அவசியமாகும். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை போன்ற சமூகச் சீரகேடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஊடகங்கள், சமூகத்தில் நிலவும் இத்தகைய இளஞ்சிறார்களின் மரணங்களுக்கு காரணமாக அமையும் வெடிபொருட்கள் குறித்த விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுகக முன்வர வேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி வலியுறுத்த விரும்புகிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மயானம் மக்கள் பாவனைக்கு எப்போது?

(வவுனியா)

பூந்தோட்டத்தில் 42 மில்லியன் ரூபா பெறுமதியில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நவீன வசதிகள் கொண்ட வாயுமூலம் எரியூட்டும் மயானத்தை மக்கள் பாவனைக்கு எபபோது வவுனியா நகரசபை கையளிக்கும் என வவுனியா நகர வரியிறுபபாளர் சங்கம் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் வரியிறுப்பாளர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த 28 ஆம் திகதி மயானம் திறக்கப்படும் என வரியிறுப்பாளர்களுடனான சந்திப்பில் நகரசபைத் தலைவரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர் 31 ஆம் திகதி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அம் மயானம் அரசாங்கத்தினால் கட்டிமுடிக்கப்பட்டு பல மாதமாகியும் யார் திறப்பது, யார் நினைவுக்கல் வைப்பது போன்ற செயற்பாடுகளினால் நகர சபையின் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் இந் நிகழ்வை நடத்தாது இருப்பது மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாகும்.

ஆகவே உடனடியாக நீங்கள் தலையிட்டு மக்கள் பாவனைக்கு மயானத்தை திறந்து விடும்படி கேட்டுக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வரியிறுப்பாளர் சங்கத்தினால் வட மாகாண ஆளுநர், வவுனியா அரசாங்க அதிபர் மறறும் நகரசபைத் தலைவர், உபதலைவர், உறுப்பினர்களுக்கும் செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (160)



பிரதான வீதியில் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும், பாதையை ஒருவழியாக அடையாளப்படுத்தும் வகையிலும் கிளிநொச்சி நகரப் பகுதியின் பிரதான வீதியின் நடுவே வீதியைப் பிரிக்கும் வகையில் தளம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (படம்: ஜெ. கலையகன்)

## பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவையின் விசேட பொதுக் கூட்டம் இன்று பி.ப 2 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு கலாசாரப் பேரவை உறுப்பினர்களையும், கலைஞர்களையும் படைப்பாளிகளையும் கலந்து கொள்ளுமாறு பூநகரிப் பிரதேச கலாசார உத்தியோகத்தரால் கேட்கப்பட்டுள்ளனர். (112)

## இரணைமடுக்குளத்தினூடாக பூநகரிக்கு குடிநீர் விநியோகம்

(பூநகரி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2000 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் இரணைமடு நீர்விநியோகத் திட்டத்தின் மூலம் பூநகரிப் பிரதேசமும் செழுமை பெற்ற பிரதேசமாகமாறி மக்கள் குடிநீர்ப் பிரச்சினையும் முற்றாகத் தீரும் என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரியில் அண்மையில் இடம்பெற்ற பொதுச் சந்தையைத் திறந்து வைத்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

பூநகரிப் பிரதேச சபை தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில், பூநகரிப் பிரதேச சபை மிகவும் வருமானம் குறைந்ததாக இருப்பதால் வரிப்பணமான சபை நிதியிலிருந்து எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

வருமானம் வரவேண்டுமென்றால் பணிகள் விஸ்தரிக்கப்படவேண்டும். இங்கு அந்த வாய்ப்பு இல்லையென்பதால் உலக வங்கியின் கடன் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். அதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம் என்றார். (112)

## முல்லைத்தீவு பிரதேசத்தில் கால்நடைகள் கடத்தல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டாக்காலிகள் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டாக்காலிகளாக திரியும் ஆடு,மாடுகளே இவ்வாறு கடத்தப்படுவதுடன் குறிப்பாக மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலிருந்து வரும் வியாபாரிகளுக்கே இங்குள்ள சிலர் சட்டவிரோதமாக விற்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சட்டவிரோதமாக கால்நடைகளை வாங்குபவர்களிடம் அனுமதிக் கடிதங்கள் இருப்பதாகவும், இதனால் அவர்களை கண்டுபிடிக்கவோ, தடுக்கவோ முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கால்நடைவைத்திய அதிகாரி, பொலிஸார், கிராம அலுவலர் ஆகியோர் கவனம் எடுக்கவேண்டும் என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (கே)

## வற்றாப்பளை கண்ணகிக்கு பூ மழை





(கிளிநொச்சி)

வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலய பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை 04 ஆம் திகதி பிற்பகல் முதல் ஆரம்பமாகி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முடிவுற்றது.

அடியவர்கள் பொங்கிப் படைத்து தமது நேர்த்திகளை வேண்டுதல்களை நிறைவேற்றினார்கள்.

திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் ஆலயத்தின் மீது இலங்கை விமானப்படையினரின் ஹெலிகொப்டரிலிருந்து பூ மழையாக வீசப்பட்டமை அடியவர்களை மிகவும் பரவசப்படுத்தியது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் அடியவர்கள் வருகை தந்தது டன கிழக்கு மாகாணத்தில் இருந தும் மற்றும் புத்தளம், உடப்பு ஆகிய இடங்களிலிருந்தும் அடியவர்கள் வந்து பொங்கிப் படைத்து நேர்த்திகளை செய்தார்கள்.

வுவனியா நலன்புரி நிலைத்தில் உள்ளமக்களும் கூட தமது நேர்த்திகளை பக்திப்பரவசத்துடன் நிறைவேற்றயமையையும் காணக் கூடியதாக இருந்தது.

வட மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட தூக்குக் காவடிகள் எடுத்துவரப்பட்டதுடன் ஆயிரக்கணககான காவடிகள் எடுத்துவரப்பட்டன.

இரவு 8.00 மணியளவில் அடியவர்களினால் ஆலய வாசலில் தீக்குளிப்பு இடம்பெற்றது.

ஆலய சுற்றாடலில் பொது மக்கள் தங்கியிருந்ததுடன் நள்ளிரவு ஆலயத்தினால் வழுந்துப் பானைப் பொங்கல் நிகழ்வும் இடம் பெற்றது. ஆலய சுற்றாடலில் பொலிஸாரும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் சுகாதாரத்திணைக்களத்தினாலும் சுகாதாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் பவுசர் மூலம் அடியவர்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

## தாமதமாகும் போக்குவரத்துக்கள் ; மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெறறு வருவதால் போக்குவரத்துக்களில் நெருக்கடிகள் இடம் பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிப் புனரமைப்பு வேலைகள் நடைபெறும் இடங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியர்கள், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கத் தவறுவதால் மாணவர்கள் பாடசாலைக்கு தாமதமாகச் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை நாட்களில் காலை 6.30 மணிமுதல் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டு போக்குவரத்து நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்களும் மாணவர்களும் கேட்டுக் கொள்கின்றனர். (எஸ்)

# கலைகள் வளர்ச்சி பெறுவதற்கு மன்றங்களின் பங்களிப்பு அவசியம்

## - வட மாகாண கல்விப்பணிப்பாளர் -



(யாழ்.நிருபர்)

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நல்ல கலைகளைப் பயிற்றுவித்து அவர்களின் ஊடாக எமது பாரம்பரியக் கலை வடிவங்களை அடுத்த சந்ததிக்குக் கையளிக்க வேண்டும். கலைகளின் வளர்ச்சிக்கு மன்றங்கள் உறுதுணையாக விளங்க வேண்டும் என வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் - கிழவன்காடு கலா மன்றம் நடத்திய கலை விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கலைகளின் ஊடாகவே எமது பிள்ளைகளிடத்தில் நல்ல சமநிலை; ஆளுமை விருத்தி செய்ய முடியும். இன்றைய இளைய தலைமுறையினை இயன்றளவில் கலைகளிலும், ஆன்மீகத்திலும் ஈடுபடுத்துவதன் மூலமே சமூகப் பிறழ்வு நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

கலைகள் மற்றும் அழகியல் செயற்பாடுகளின் ஊடாக பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக் கொண்டு வரமுடியும். ஒற்றுமை உணர்வும், நல்லதொரு பண்பாடும் பேணப்பட முடியும்.

கிழவன்காடு கலாமன்றம் கடந்த பத்து வருடங்களாக காரைநகர்ப் பிரதேச மாணவர்களுக்கு இசைப்பயிற்சி, மிருதங்கம், வயலின் போன்ற வாத்திய இசைக்கருவிகளின் பயிற்சி, நடனம், நாடகமும் அரங்கியலும், கூத்து, யோகாசனம், தியானம் போன்ற பல்வேறு கலைகளையும் பயிற்றுவித்து வருகின்றது. இந்தக் கலாமன்றத்தின் ஊடாக பல இளங்கலைஞர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். கலாமன்ற மாணவர்கள் காரைநகரில் மட்டுமின்றி யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருவது பாராட்டத்தக்கது. நல்லூர் உற்சவகாலங்களில் கூட முழு நாள் நிகழ்ச்சிகளைச் சிறப்பாகச் செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பி.நந்தகுமார், முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சங்கீத கலாபூஷணம் சு.கணபதிப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார்.

(10)

# இரணைமடுக் குளத்தின் கீழ் அத்துமீறிய நெற் செய்கை

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்து நீரைப் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அத்துமீறிய நெற்செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் இக்குளத்து நீரைப் பயன்படுத்தி 7 ஆயிரத்து 500 தொடக்கம் 8 ஆயிரம் ஏக்கர் வரை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளவது என பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும் தற்போது 9 ஆயிரம் முதல் 9 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இவ்வாறான அத்துமீறிய நடவடிக்கையால் ஏனைய விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


குறிப்பாக இரணைமடுக் குளத்தின் நீர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நெற்செய்கைக்கென விநியோகிக்கப்படுவதால் குறிப்பிட்ட அளவு ஏக்கருக்கான நீர் விநியோகமும் குறைவடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் நீர் விநியோகத்தில் ஏற்படும் நெருக்கடியைத் தடுப்பதற்கு உரிமையாளர்கள் அத்துமீறி நெற்செய்கையில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (கே)



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு சமூக, கல்வி அபிவிருத்தி நிறுவனம் (செடோ) மாதாந்த கல்வி உபகார நிதியை வழங்கும் நிகழ்வு ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றபோது செடோவின் தலைவரும் உதவிமேயருமான சட்டத்தரணி எம்.எம்.ரமீஸ் உரையாற்றுவதையும், கிராம அலுவலர் J/86 எஸ்.எம்.ஜினூஸ் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (105)

# பரமர் சங்கமம்



"பழைய குருடி கதவைத் திறவடி" என்றொரு பழமொழி இருக்கு. அது போலத்தான் சில காரியங்கள் நடந்து கொண்டிருக்கு.

எங்கட யாழ்ப்பாண நகரப் பகுதியில இருந்து சில விசயங்களை இல்லாமல் செய்வதற்கு பெரும் பிரயத்தனங்கள் செய்தாலும், அது எங்களை விட்டுப் போக மாட்டேனென அழுங்குப் பிடியாக திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கு.

நடைபாதைக் கடைகளை அகற்றுதல், தனியார் பேருந்துகள், மத்திய பஸ் நிலைய நுழைவாசலில் தரித்து நின்று பிரயாணிகளை ஏற்றுதல், வீதிப் போக்குவரத்து, ஒழுங்கு. இந்த மூண்டு காரியங்களும் ஒரு நகருக்கு முக்கியமானவை.

இவற்றை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வந்து விடலாமெண்டு யாழ்.மாநகர சபையும், காவல் துறையினரும் பத்துக்கு மேற்பட்ட தடவைகள் கண்ணில எண்ணை ஊத்திக் கொண்டு நிண்டதுதான் மிச்சம்.

நடைபாதைக் கடைகளை இல்லாமல் செய்வதற்காக மூத்திர ஒழுங்கையாக இருந்த இடத்தை முனீஸ்வரன் வீதியாக மாற்றி இடங்கள் குடுத்து அகற்றி விட்டார்கள்.

எண்ணி ஆறு மாதங்கள் முடிய முன்னமே பழைய படி ஆஸ்பத்திரி வீதியில போதனா வைத்தியசாலைக்கும், பஸ் நிலையத்திற்கும் இடைப்பட்ட நடை பாதையில பழைய நடை பாதை வியாபாரிகளின் வாரிசுகள் கடை விரிக்கத் தொடங்கி விட்டனர்.

கொஞ்சக் காலம் போக்குவரத்துப் பொலிஸார் உசாரா நிண்ட நாட்களில் தனியார் சிற்றூர்திகள் வீதிகளில் நிண்டு ஆக்களை ஏத்திறேல்லை. ஏத்துறேண்டாலும் "ரபிக் நிக்கிறான் கெதியாக் கெதியா" எண்டு ஒற்றை காலில் நிற்பினம். ஒரு வழிப்பாதேல வாறவையத் திருப்பி அனுப்பியதால வீதிப் போக்குவரவும் திருந்திக் கொண்டு வந்தது.

பிறகு இப்ப என்னெண்டா "பழைய குருடி கதவைத் திறவடி" எண்டு நடை பாதையில கடைகள் மட்டுமில்ல குறத்தியள் சாத்திரமும் கூடச் சொல்ல வெளிக்கிட்டு இருக்கினம்.

தனியார் சிற்றூர்திகள் பேருந்து நிலையத்தின் நுழை வாயில் முகப்பில் பூபால சிங்கம் புத்தகக் கடையோடை பஸ்களைக் கொண்டு வந்து "தாக்கற" நிற்பாட்டி ஆக்களை ஏத்தினம்.

இடது கை ஓட்டம், ஒரு வழிப்பாதை நடைமுறைகள் சிதைந்து போய் வீதிகளில் குறுக்கும் மறுக்குமாக துவிச்சக்கர, உந்துருளிகளும் பாதசாரிகளும் நடமாடுகினம்.

இந்த நிலைமேல போக்குவரவு நெரிசலும், இடையூறுகளும், விபத்துக்களும் திரும்பவும் நகரப் பகுதியில் கோலோச்சத் தொடங்கி விட்டுது. இதனால யாருக்கு என்ன இலாபம்?

இவ்விடயத்தில தான் "நாய் வாலை நிமித்த முடியுமா" எண்ட கேள்வி எழுகுது. எமது நகரம், எமது பாவனைக்கு உரியது எண்டு சிந்தித்து நடந்தால் எவருக்கும் நட்டம் ஏற்பட்டு விடாதல்லவா. என்ன நான் சொல்லுறே...

# புதிய கட்டடம் அமைக்க காணி கொள்வனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளைக்கான புதிய கட்டடத்தை கட்டுவதற்கு சங்கக்கிளை பருத்தித்துறை முனைப்பிலுள்ள காணியொன்றை கொள்வனவு செய்துள்ளது.

இதற்கான அனுசரனையை இலங்கை செம்பிறைச் சங்கம் வழங்க முன்வந்துள்ளது. இது வரை காலமும் சொந்தக் கட்டடம் இல்லாத நிலையில் இயங்கி வந்தது. தற்போது காணி கொள்வனவு செய்யப்பட்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர் புதிய கட்டடத்தில் கிளை இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (109)

# முதலாமிடம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயமட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டிகளில் ஆங்கில பாடல போட்டியில் யாழ்.சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மேற்பிரிவு, கீழ்ப்பிரிவுகளில் முதலாமிடத்தைப் பெற்று மாவட்டமட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (11)


# முரசின் இன்றைய பலன்

(06.06.2012 -புதன்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 24 ஆம் திகதி. துதியை பிற்பகல் 1.07 வரை.
நட்சத்திரம் மூலம் மரணயோகம், முற்பகல் 8.46 வரை.
இராகுகாலம் 11.52 - 1.22 வரை. சுபநேரம் 4.22 - 5.52 வரை.
எமகண்டம் 7.22 - 8.52 வரை. குளிகைகாலம் 11.52 - 1.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சந்திராட்டமம் கவனம் அவசியம், பொன் பொருள சேரும், குடும்பத்தில் அதிருப்தி, இடமாற்றம். |
| ரிஷபம் | அன்னியர் உதவி, திருப்தியற்ற குடும்ப உறவு, கவனம் தேவை, செலவுகள் அதிகரிப்பு, |
| மிதுனம் | நற்காரிய செலவு, நம்பிக்கை ஒளிவிடும், மனத்தையிரியம், குடும்பத்தில் சுப காரியம். |
| கடகம் | பிரயாண அனுகூலம், உடல் நலம் தேறும், பந்தயங்களில் வெற்றி, மனத்திருப்தி. |
| சிம்மம் | கௌரவம், பணவரவில் சிரமங்கள், பொறுப்புக்கள் அதிகரிப்பு, கூழவரும் சுப காரியங்கள். |
| கன்னி | சுப மங்களம், முதலீடுகளில் கவனம், கடன்பட நேரிடும், குறைவற்ற ஆரோக்கியம். |
| துலாம் | செல்வாக்கு, குடும்பத்தில் அன்னியோன்யம், புத்திரரில் அவதானம், பிரச்சினைகள். |
| விருச்சிகம் | நன் முயற்சி, குழப்பங்கள் அதிகரிக்கும், பிரசசினைகளால் மன உழைச்சல், கோபம் தவிர். |
| தனுசு | பெரியோர்கள் ஆசி, வங்கிச் சலுகைகள் அதிகரிக்கும், உறவினர் வருகையால் செலவு. |
| மகரம் | பெருமை, குரோதம் நீங்கி நட்பு மலரும், முதலீட்டுக்கு ஏற்ப இலாபம், அதிகாரி கண்டிப்பு. |
| கும்பம் | காரிய சித்தி, வார்த்தைப் பிரயோகத்தில் கவனம், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரியத்தடை. |
| மீனம் | மதிப்பு உயரும், கடனை திருப்பிப் பெறுவதில் அலைச்சல், கல்விச் செலவு அதிகரிக்கும். |



## மார்க் வெப்பர் சம்பியன்

(மான்டி கார்லோ)

மொனாகோ பார்முலா-1 கார்பந்தயத்தில் ரெட் புல் ரேசிங்-ரெனால்ட் அணியின் மார்க் வெப்பர் சம்பியன் பட்டம் வென்றார்.

நடப்பு ஆண்டின் 6ஆவது கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா 1 கார்பந்தயம் மொனகோவில் உள்ள மான்டி கார்லோ நகரில் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த இறுதிச் சுற்றில் சிறப்பாக செயல்பட்ட ரெட் புல் ரேசிங்-ரெனால்ட் அணியின் ஆஸ்திரேலிய வீரர் மார்க் வெப்பர் முதலிடம் பிடித்தார். இவர், பந்தய தூரத்தை ஒரு மணி நேரம், 46 நிமிடம், 06.557 வினாடிகளில் கடந்தார். மெர்சிடஸ் அணியின் ஜெர்மனி வீரர் நிகோ ராஸ்பர்க், பெராரி அணியின் ஸ்பெயின் வீரர் பெர்ணான்டோ அலோன்சா ஆகியோர் முறையே 2, 3வது இடம் பிடித்தனர்.

# ஐ.சி.சி.யின் புதிய விதிகள் சில அணிகளுக்கு அனுகூலம்

(கொழும்பு)

சர்வதேசக் கிரிக்கெட் சபை செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய விதிகள் சில அணிகளுக்கு அதிக அனுகூலத்தை வழங்கலாம் என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையிலேயே ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஓர் அணி சார்பாக இரண்டு புதிய பந்துகளைப் பயன்படுத்துவதற்காக விதி அறிமுகப் படுத்தப்பட்டிருந்தநிலையில்,புதிதாகப்பரிந்துரைக் கப்பட்டுள்ள விதியும் நடைமுறைப்படுத்தப்பட்டால் சிறந்த வேகப்பந்து வீச்சைப் பிரதானமாகக் கொண்ட அணிகளுக்கு வாய்ப்பாக அமையும்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அண்மைக் காலத்தில், குறிப்பாக கடந்த 8 வருடங்களில் ஏராளமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய நுட்பங்களும், புதிய விதிகளும் உட் புகுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இவ்வாறான மாற்றங்கள் நிரந்தரமான மாற்றங்களாகக் கருதப் படுகின்றனவா என்பதை நோக்க வேண்டியுள்ளது.

அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகள் 2015ஆம் ஆண்டில் அவுஸ்ரேலிய, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள நிலையில் புதிதாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்கள் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கு அனுகூலமாக அமைய வாய்ப்புள்ளது. எனினும் எங்களிடமும் ஓரளவு சிறந்த வேகப்பந்து வீச்சு அணி காணப்படும் நிலையில் அதை திருப்பிக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது எனத் தெரிவித்தார்.

# மெக்கிக்கோவிடம் வீழ்ந்தது பிரேசில்

(டாலஸ்)

மெக்சிக்கோ அணிக்கு எதிரான சர்வதேச நட்பு கால்பந்து போட்டியில், பிரேசில் அணி அதிர்ச்சி தோல்வியடைந்தது.

பிரேசில், மெக்சிக்கோ அணிகள் மோதிய நட்பு கால்பந்து போட்டி அமெரிக்காவில் உள்ள டாலசில் நடந்தது. போட்டியின், முதல் பாதியின் 22ஆவது நிமிடத்தில், மெக்க்சிகோ அணியின் சண்டோஸ் ஒரு கோல் அடித்து, வெற்றிக்கு வித்திட்டார். 33ஆவது நிமிடத்தில், மெக்சிக்கோ அணி ஜாவியர் பெனால்டி வாய்ப்பில் கோல் அடித்து, வெற்றியை உறுதி செய்தார். பிரேசில் அணி கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில், மெக்சிகோ அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யூரோ கோப்பை கால்பந்து தொடர், நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், பிரேசில் அணியின் தோல்வி, அந்த அணியின் ரசிகர்களை கலக்கமடைய செய்துள்ளது.

பிரேசில் அணி மெக்கிக்கோ அணியில்தோல்வி அடைந்தமை எதிர்பாராத ஒரு நிகழ்வே. இதனை பிரரேசில் அணியின் பலவீனம் என எதிரணியினர் கணக்கெடுக்குமாயின் அது எமக்குப் பலமாகவே அமையும். தோல்வியை நாம் நியாயப்படுத்த முற்படவில்லை. அடுத்து வரும் போட்டிகளில் எமது ஆட்டத் திறன் வெளிப்படும் என பிரேசில் பயிற்றுநர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் ஒரு நாள் அணியில் தன்வீர்

(லாகூர்)

இலங்கைக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அணியில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொஹைல் தன்வீர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். காயமடைந்துள்ள ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் நசீர் ஜம்சத் இற்குப் பதிலாகவே அவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட அணிகளில் சொஹைல் தன்வீர் -ருவெண்ரி -20 போட்டிகளுக்கான அணியில் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் இடம்பெற்று முடிந்த 2 ருவெண்ரி - 20 சர்வதேசப் போட்டிகளிலும் சொஹைல் தன்வீர் மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்தார்.

இடம்பெற்ற இரண்டு போட்டிகளிலும் ஓட்டங்களைக் கட்டுப்படுத்திப் பந்துவீசிய சொஹைல் தன்வீர், 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்துடன் தொடரின் நாயகனாகவும் அவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

ருவெண்ரி -20 தொடர் போன்று ஒரு நாள் தொடரில் தன்வீர் சிறப்பான முறையில் செயற்படுவார் என்ற நம்பிக்கை உள்ளதாகவும், அதன் மூலமே அவர் ஒரு நாள் அணியில் உள்வாங்கப்பட்டதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

# உலகின் உயர்ந்த போர்க்களம் காணச் செல்கிறார் டோனி



(ஸ்ரீநகர்)

உலகின் மிக உயர்ந்த போர்க்களமான, பனி மலைகள் சூழ்ந்த சியாச்சின் பகுதிக்கு செல்கிறார் இந்திய அணியின் கப்டன் டோனி.

இந்திய இராணுவத்தில் இருந்து கடந்த ஆண்டு, கப்டன் டோனிக்கு கௌரவ லெப்டினன்ட் கேணல் பதவி வழங்கப்பட்டது. போட்டிகள் எதுவும் இல்லாத நிலையில் இவர் ஜம்மு-காக்ஷ்மிர் சென்று, இராணுவ வீரர்களை சந்தித்து வருகிறார். முதல் நாள் ஜம்முவில் இருந்து 200 மீ., தூரம் உள்ள இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கட்டுப்பாட்டு பகுதிக்கு சென்றார். இரண்டாம் நாள் பாரமுல்லா, அமன் சேது உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

இதுகுறித்து பாதுகாப்பு பிரிவின் செய்தித் தொடர்பாளர் ஜே.எஸ்.பிரார் கூறியது:

டோனி, காஷமீர் பள்ளத்தாக்கு பகுதியின் சிறப்பு காவல் படையில் இராணுவ வீரர்களை சந்தித்துப் பேசினார். பின், பணியின் போது காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் வீரர்களை சந்தித்து பேசினார்.

அவர்கள் தியாகத்துக்கு நன்றி தெரிவித்த டோனி, பரிசுகள் வழங்கினார். பின், ஸ்ரீநகரை சேர்ந்த பிராந்திய பட்டாலியன் வீரர்களை சந்தித்து பேசினார். இந்த பயணத்தின் இரண்டாவது பகுதியாக மற்றும் உலகின் மிக உயரமான போர்க்களப் பகுதியான சியாச்சினுக்கும் செல்லவுள்ளார் எனத் தெரிவித்தார்.

# அதிகளவு வருமானம்

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு அனுசரணையாளர்கள் மூலம் அதிகளவு வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் கடந்த நான்கு வருடங்களில் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. பங்களாதேக்ஷ் கிரிக்கெட் வரலாற்றில் கிடைக்கப்பெற்ற கூடுதலான வருமானமாக இது கருதப் படுகின்றது. எதிர்காலத்தில் அதிக வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை குறிப்பிட்டுள்ளது.



# 15 மாதங்களுக்குப் பின்னர் தேசிய அணியில் கெய்ல்

(அன்டிகுவா)

15 மாதங்களுக்குப் பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் மீண்டும் கிறிஸ் கெய்ல் இடம் பெற்றுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான அணியில் அவர் சேர்க்கப் பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்ததால் கெய்ல் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார். பலமுறை நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. ஐ.பி.எல். போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கெய்லுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டது.

ஐ.பி.எல். போட்டி காரணமாக அவர் உள்ளூரில் நடந்த அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஆடவில்லை. மேற்கிந்தியத்தீவு அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. டெஸ்ட் தொடரை இழந்துவிட்டது. ஒருநாள் தொடருக்கான அணியை பலப்படுத்தும் வகையில் கெய்ல் இடம் பெற்றுள்ளார். எதிர்வரும் 16ஆம் திகதி ஒருநாள் தொடர் தொடங்குகிறது. இதேபோல சிம்மன்ஸ், வெய்ன் பிராவோ, போலார்ட், ரஸ்ஸல் ஆகியோரும் அணியில் இடம் பெற்றுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள ஒரு நாள் அணி விபரம் வருமாறு:

டரன் சமி (கப்டன்), கிறிஸ் கெய்ல், ஜோன்சன் சார்லஸ், சிம்மன்ஸ், டரன் பிராவோ, போலார்ட், சாமுவேல்ஸ், வெய்ன் பிராவோ, ராம்டீன், வெய்ன் ஸ்மித், ஆந்த்ரே ரஸல், டினோ பெஸ்ட், எட்வேர்ட்ஸ், ராம்போல், சுனில் நரைன்.



# கிரிக்கெட்டிற்கே முன்னுரிமை

(மும்பை)

எந்தவொரு உயர் பதவி எனக்கு கிடைத்தாலும் கிரிக்கெட்டுக்கே எனது முன்னுரிமை என நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையின் உறுப்பினராக பதவியேற்றுள்ளதை அடுத்து அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். எனினும் நாடாளுமன்றப் பணிகளுக்காக தாம் கிரிக்கெட்டிலிருந்து ஒதுங்குவதாக வெளியாகியுள்ள கருத்துக்களை அவர் நிராகரித்துள்ளார். கிரிக்கெட் போட்டிகள் நிறைவு பெற்றதன் பின்னரே நாடாளுமன்ற விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தியப் நாடாளுமன்றத்தால் கிடைக்கப்பெற்ற இந்த வாய்ப்பை ஒரு கௌரவமாக கருதுவதாகவும் சச்சின் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளியேறினார் லி நா காலிறுதியில் ஷரபோவா



(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) தகுதி பெற்றார். இதேவேளை, நடப்புச் சம்பியனான சீனாவின் லிநா நான்காவது சுற்று ஆட்டத்துடன் வெளியேறியுள்ளார்.

நான்காவது சுற்றில் கிளாரா ஸகோபலோவாவுடன் (செக் குடியரசு) மோதிய ஷரபோவா 6-4, 6-7 (5-7), 6-2 என்ற செட்களில் போராடி வென்று காலிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு 4ஆவது சுற்று ஆட்டத்தில், நடப்பு சம்பியன் நா லி (சீனா) 63, 26, 06 என்ற செட்களில் யரோஸ்லாவா ஷ்வெடோவாவிடம் (கஜகஸ்தான்) அதிர்ச்சி தோல்வி அடைந்து பரிதாபமாக வெளியேறினார்.

இதேவேளை, கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதியில் விளையாட, இந்தியாவின் மகேஷ் பூபதி சானியா மிர்சா ஜோடி (தகுதி பெற்றது. காலிறுதியில் பெக்ஷ்கே (செக்.) மைக் பிரையன் (அமெரிக்கா) ஜோடியுடன் மோதிய இந்திய ஜோடி 6-2, 6-3 என்ற நேர் செட்களில் அபாரமாக வென்று அரையிறுதிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவோம் என பூபதி, சானியா ஜோடி தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்தில் அன்டி முர்ரே தகுதி பெற்றுள்ளார்.

# வடமாகாண மென்பந்து கிரிக்கெட் வவுனியாவில் நாளை ஆரம்பம்

விளையாட்டுச் செய்திகள்

(வவுனியா)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு இடையேயான பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதில் ஆண்கள், பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளன.

வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆண்களுக்கனா கிரிக்கெட் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

வவுனியா பெரிய கோமரசன்குளம் மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி - மன்னார் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம் - கிளிநொச்சி பூநகரி மகாவித்தியாலம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - முல்லைத்தீவு மகாவித்தியாலயம், கிளிநொச்சி அக்கராயன்குளம் மகாவித்தியாலயம் - முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி, மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி - மன்னார் பாத்திமா மத்திய மகாவித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் கடந்தாண்டு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள பெண்களுக்கான போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

கிளிநொச்சி கன்கபுரம் மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மன்னார் சென் ஜோசேப்வாஸ் மகாவித்தியாலயம் - முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - யாழ்ப்பாணம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயம் - மன்னார் தட்சனார் மருதமடு மகாவித்தியாலயம், மன்னார் புனிதவளனார் மகாவித்தியாலயம் - வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி, கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி - முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி, வவுனியா புதுக்களம் மகாவித்தியாலயம் - கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாட்சாலை. இரண்டாம் சுற்றில் கடந்தாண்டு மாகாண சம்பியனாக தெரிவு செய்ய:ப்பட்ட யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதவுள்ளது. (12)

# ஜே.பி.எல். ருவென்ரி-20 யாழ். சென்றல் வெற்றி




(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது போட்டியில் யாழ். சென்றல் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ். சென்றல் அணியும், கிறாஸ் ஹோப்பெர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிறாஸ் ஹோப்பெர்ஸ் அணி 18.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித் 17, கபிலன் 31 பந்துகளில் 29, கோகுலன் 20 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செல்ரன் 26 ஓட்டங்களைக்கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், விமலகாந் 19 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். சென்றல் அணி 19.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கபில்தேவ் 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும், பாலேந்திரா 28 பந்துகளில் 30 ஓட்டங்களையும், அன்றூ 18 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன் 29 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், ரவிசங்கர் 31 ஓட்டங்களைக்கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக அன்றூ தெரிவானார்.

(எஸ்.பி., எஸ்)

# விளையாட்டு விழா

(புத்தூர்)

புத்தூர் கிழக்கு மகாத்மா காந்தி, மகாத்மா, அறிவொளி சனசமூக நிலையங்கள் இணைந்த ஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

போட்டிகள் தொடர்ச்சியாக ஒரு மாத காலத்திற்கு நடைபெறும் என்று பொன் விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான போட்டிகளின் முதற் போட்டியாக யாழ் மாவட்டத்தில் முன்னணி கழகங்கள் பங்கு பற்றிய சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. (02)

# கிளி. மாவட்டப் பெரு விளையாட்டு பெண்களுக்கான போட்டி முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டுப்போட்டிகளில் பெண்களுக்கான போட்டி முடிவுகள் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் நிமிர்த்தம் முடிவுகள் வருமாறு,

19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள்:

எல்லே

முதலாமிடம் பரந்தன் இந்து மகாவித்தியாலயம், இரண்டாமிடம் ஜெயபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் சிவநகர் அ.த.க.பாடசாலை

கபடி

முதலாமிடம் சிவநகர் அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் பூநகரி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை.

வலைப்பந்து

முதலாமிடம் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம் முருகானந்தாக்கல்லூரி, மூன்றாமிடம் வட்டக்கச்சி. மகாவித்தியாலயம்

கால்பந்து

முதலாமிடம் சிவநகர் அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் உருத்திரபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் வேராவில் இந்துக்கல்லூரி.

கரப்பந்தாட்டம்

முதலாமிடம் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, இரண்டாமிடம் வட்டக்கச்சி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் பளை மத்திய கல்லூரி.

மென்பந்து கிரிக்கட்

முதலாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் புனித திரேசா மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் சிவநகர் அ.த.க.பாடசாலை.

மேசைப்பந்து

முதலாமிடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம்.

சதுரங்கம்

முதலாமிடம் வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கிளிநொச்சி மத்திய கல்லூரி.

பூப்பந்தாட்டம்

முதலாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

கரம்

முதலாமிடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி, இரண்டாமிடம் கனகபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் முருகானந்தா கல்லூரி.

உடற்பயிற்சி

முதலாமிடம் இராமநாதபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் புனித திரேசா மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் பிரமந்தனாறு மகாவித்தியாலயம்.

கராத்தே காட்டா (தனி)

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்,

கராத்தே குமுத்தே (தனி)

முதலாமிடம் கிளிநொச்சி மகாவித்தியாலயம்

15 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள்

கபடி

முதலாமிடம் பூநகரி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் உருத்திரபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் சிவநகர் அ.த.க.பாடசாலை.

வலைப்பந்து

முதலாமிடம் அக்கராயன் மகாவித்தியால யம், இரண்டாமிடம் இராமநாதபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் முருகானந்தாக்கல்லூரி.

கரப்பந்தாட்டம்

முதலாமிடம் உருத்திரபுரம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் தர்மபுரம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

(தொடரும்)




இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் கடந்த 2010ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் பரிசளிப்பு விழா கடந்த முதலாம் திகதி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இடம் பெற்றது. இப்போட்டித் தொடரில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இரண்டாமிடத்திற்கான கிண்ணம் வென்ற சென். பற்றிக்ஸ் அணியினர், பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுனருடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி)

# நவநீதம்பிள்ளையின் பதவி நீடிப்பும் இலங்கையின் பிடிவாதத் தளர்வும்!

**ஐ.நாவுக்கோ, ஐ.நா. அதிகாரிகளுக்கோ அல்லது மேற்குலக நாடுகளுக்கோ எதிராக எந்தக் கருத்தையும் வெளியிட வேண்டாம் என்ற தகவல் ஐரோப்பாவில் உள்ள இலங்கை இராஜதந்திரிகளுக்கு கொழும்பில் இருந்து பரிமாறப்பட்டுள்ளதாகவும் தகவல்.**

கே. சஞ்சயன் கட்டுரையிலிருந்து

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்தப் பதவியில் நீடிப்பதற்கு, கடந்தவாரம் ஐ.நா. பொதுச்சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இவரது பதவியை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பதற்கு ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் அனுமதி கோரியதை அடுத்து, இந்த அனுமதி கொடுக்கப்பட்டது. அதுவும் ஏகமனதான அங்கீகாரம் கிடைத்தது.

193 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா பொதுச்சபையில் நவநீதம்பிள்ளையின் பதவி நீடிப்புக்கு எந்த நாடுமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதுதான் ஆச்சரியமான விடயம். நவநீதம்பிள்ளையை கடுமையாக எதிர்த்த நாடுகளில் ஒன்று இலங்கை.

அவர் பாரபட்சமான முறையில் நடந்து கொள்வதாகவும், ஐ.நா சாசனங்களை மீறிச் செயற்படுவதாகவும், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர்களில் இலங்கைப் பிரதிநிதிகளால் குற்றம் சுமத்தப்பட்டவர் தான் நவநீதம்பிள்ளை.

அப்படியிருந்தும் ஐ.நா பொதுச்சபையில் இலங்கைப் பிரதிநிதியான பாலித கோஹன்ன, அவருக்கு எதிராக எந்தக் கருத்தையும் கூறவில்லை. பாரபட்சமாக நடக்கும் ஒருவர், மீண்டும் அந்தப் பதவிக்கு வருவதை இலங்கை எதிர்த்திருக்க வேண்டும். அதுதானே முறை.

ஜெனிவாவில் நவநீதம்பிள்ளை மீது சுமத்திய குற்றச்சாட்டு உண்மையானதென்றால், நியூயோர்க்கில் அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்க வேண்டும். அப்படிக் களமிறங்கியிருந்தால், இலங்கைக்கு ஆதரவளிக்க ஐ.நா பொதுச் சபையில் பல நாடுகள் இருந்தன.

குறிப்பாக ரஷ்யா, சீனா, கியூபா, பாகிஸ்தான், சிரியா,இஸ்ரேல் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவு கொடுக்கக் கூடிய நிலையில்தான் இருந்தன.

ரஷ்யாவும், சீனாவும் ஏற்கனவேஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகம் பாரபட்சமாக நடந்து கொள்வதாக குற்றம்சாட்டியிருந்தன.



அத்துடன் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் மேற்கு நாடுகளின் செல்வாக்கே அதிகம் இருப்பதாகவும் இவை குறை கூறி வருகின்றன. கியூபாவும் கிட்டத்தட்ட அதே நிலைப்பாட்டில் தான் இருந்தது.

சிரியாவோ தன்மீது நவநீதம்பிள்ளையின் அலுவலகம் கடும்போக்கு காட்டுவதாகவும்- பாரபட்சமாக நடந்து கொள்வதாகவும் விமர்சித்து வந்தது.

பலஸ்தீனர்களின் விவகாரத்தில் தனக்கு எதிராக நவநீதம்பிள்ளையின் அலுவலகம் செயற்படுவதாக இஸ்ரேலும் கூறிவந்தது.

இப்படி ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் செயற்பாடுகளால், அதன் தலைமையைப் பிடிக்காத பல நாடுகள் இருந்தன. இந்த நாடுகள் தமது நாடுகளின் மீதான தலையீட்டை விரும்பவில்லை அல்லது விமர்சனங்களை சகித்துக் கொள்ளத் தயாராக இல்லை. இவற்றோடு இலங்கையும் இருந்தது.

ஆனாலும் இந்த நாடுகள் எதுவுமே நவநீதம்பிள்ளைக்கு எதிராக குரல் கூடக் கொடுக்கவில்லை. மற்றெல்லா நாடுகளும் மௌனமாக இருந்தது ஆச்சரியமல்ல.

இலங்கை எதற்காக அமைதியாக இருந்து, அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயங்கியது என்ற கேள்வி முக்கியமானது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித-உரிமைகள் பேரவையில், அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் பின்னணியில் நவநீதம்பிள்ளையின் அலுவலகமே இருந்ததாக அரசாங்கம் ஏற்கனவே குற்றம் சாட்டியிருந்தது.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்த இந்தியா மீதான இலங்கை அரசின் கோபம் இன்னும் குறையவேயில்லை.

நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு ஐ.நா பொதுச்சபையில் வந்தபோது, ஜெனிவா தீர்மானத்தை மனதில் வைத்து, இந்தியா நிறுத்திய வேட்பாளரை எதிர்த்து வாக்களித்தது.

ஆனால், ஜெனிவா தீர்மானத்தின் தீவிரத்தைக் குறைத்து, தலையோடு போக வேண்டியதை 'தலைப்பாகை' யுடன் காப்பாற்றிய இந்தியாவை எதிர்த்த இலங்கை-

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதில் பின்னணியில் இருந்ததாகக் கூறிய நவநீதம்பிள்ளைக்கு எதிராக வாக்களிக்காமல் வேடிக்கை பார்த்துள்ளது.

இதை வைத்துக் கொண்டு ஒரு முடிவுக்கு நாம் வரமுடிகிறது. ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைத் தீர்மானம் அரசாங்கத்தை ஒரு 'வழிக்கு' கொண்டு வரத் தொடங்கி விட்டது என்பதே அது.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் அமெரிக்கப் பயணம், அமெரிக்கா கேட்டுக் கொண்ட பல விடயங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் காட்டும் முனைப்பு என்பன இதனைச் சுட்டிக்காட்டுகின்றன.

வரும் நவம்பர் மாதம் 1ஆம் திகதி ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலை மீளாய்வு செய்யப்படவுள்ளது.

இது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மீளாய்வு. இலங்கை குறித்த இந்த மீளாய்வுக்கு இந்தியா, பெனின், ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகள்தான் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் துரதிஷ்டம் என்னவென்றால், இவை மூன்றுமேஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்தவை என்பதுதான்.

எனவே அரசாங்கம், வரும் நவம்பவர் மாதம் நடைபெறப் போகின்ற மீளாய்வை சாதாரணமாக எடுத்துக் கொண்டு விட முடியாது. இலங்கைக்கு, இந்தியா தயவு காட்டும் என்ற நம்பிக்கை இருந்தாலும், கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னர், இந்தியாவுடன் நெருக்கம் குறைந்து போயுள்ளது.

ஏனைய நாடுகள் இரண்டும் இலங்கைக்கு சார்பாக நடந்து கொள்ள அவ்வளவுக்கு வாய்ப்பில்லை.

எனவே சர்வதேச அரங்கில் தனது போக்கையும், அணுகுமுறைகளையும் சற்று மாற்றிக் கொள்ளத் தலைப்பட்டுள்ளது என்றே விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஐ.நாவுக்கோ, ஐ.நா அதிகாரிகளுக்கோ அல்லது மேற்குலக நாடுகளுக்கோ எதிராக எந்தக் கருத்தையும் வெளியிட வேண்டாம் என்ற தகவல் ஐரோப்பாவில் உள்ள இலங்கைஇராஜதந்திரிகளுக்கு கொழும்பில் இருந்து பரிமாறப்பட்டுள்ளதாகவும் தகவல்.

ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் வெளிநாடுகளில் உள்ள இலங்கை இராஜதந்திரிகள் சிலர் வாய்க்கு வந்தபடியெல்லாம் மேற்குலகையும் ஐ.நா அமைப்புகளையும் வசைபாடியிருந்தனர்.

அப்படியொரு சந்தர்ப்பத்தில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் கொடும்பாவி எரிக்கும் போராட்டத்துக்கு பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தலைமை தாங்கியும் இருந்தார்.

இவையெல்லாம் சர்வதேச அரங்கில் இலங்கையின் பெயரைக் கெடுத்து- அந்த நாடுகளுடனான உறவுகளையும் சீர்குலைத்து விட்டன என்ற உண்மை இப்போதுதான் அரசுக்கு உறைக்கத் தொடங்கியுள்ளது.

இதனால்தான் நவம்பர் வரை அமைதியாக- குட்டையைக் குழப்பாமல் இருக்கும்படி அறிவுறுத்தல் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

நவநீதம்பிள்ளைக்கு பதவிநீடிப்புச் செய்யும் தீர்மானம் ஐ.நா பொதுச் சபையில் விவாதத்துக்கு கொண்டு வரப்பட்ட போது, இலங்கைப் பிரதிநிதி பாலித கோஹன்ன வாய் திறக்காமல் இருந்ததற்கு இதுவே காரணம்.

சர்வதேச சமூகத்தின் பகையை - எதிர்ப்பை இனிமேலும் சம்பாதிக்காமல் குறைந்தபட்சம் இப்போதுள்ள நிலையாவது தொடர வேண்டும் என்றே அரசாங்கம் விரும்புகிறது.

அதேவேளை, நவநீதம்பிள்ளை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் பதவியில் இருப்பதற்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தை, அரசாங்கம் விரும்பி வரவேற்றது என்று கூற முடியாது.

அவர் ஒரு தமிழர் என்பதால்- தமக்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடுமோ என்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருக்கலாம். அவர் இந்தப் பதவிக்கு முதல்முறையாக நியமிக்கப்பட்ட போதே அரசாங்கம் இந்த அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தது.

நவநீதம்பிள்ளையின் பதவிக் காலம் இந்த ஆண்டுடன் முடிவுக்கு வந்திருந்தால், ஏனைய 192 நாடுகளை விட அதிகம் சந்தோசப்பட்டிருப்பது இலங்கையாகத் தான் இருக்க முடியும்.

காரணம், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரே, ஜெனிவா தீர்மானத்தின் அடிப்படையில்- இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான அறிக்கையை அளிக்க வேண்டும்.

நவநீதம்பிள்ளை அடுத்த இரண்டு ஆண்டுகள் ஜெனிவாவில் சக்திவாய்ந்தவராக இருக்கப் போவது இலங்கைக்கு கவலை தரும் விடயமாகவே இருக்கும்.

எதிர்வரும் நவம்பரில் நடக்கவுள்ள மீளாய்வுக் கூட்டம், வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை என்பன அரசுக்கு கணிசமான நெருக்கடிகளைக் கொடுக்கும்.

இந்தச் சூழலில் ஜெனிவா தீர்மானத்துக்கு அமைய, இலங்கைக்கு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது பற்றிக் கலந்துரையாட ஒரு குழுவை அனுப்பவுள்ளதாக நவநீதம்பிள்ளை அறிவித்துள்ளார்.

ஜூலை மாதம் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ள இந்தக் குழுவை வரவேற்க அரசாங்கம் தயாராக இல்லை. தமக்கு யாருடைய ஆலோசனையோ தொழில்நுட்ப உதவி-களோ தேவையில்லை என்கிறது அரசாங்கம்.

ஒருபக்கத்தில் ஐ.நாவுடன் மோதல் போக்கை கடைப்பிடிப்பதை தவிர்த்துக் கொண்டாலும், இன்னொரு பக்கத்தில் ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் விவகாரத்தில் அரசாங்கம் இன்னமும் முரண்பட்டுக்கொண்டே இருக்கிறது.

அரசாங்கத்தின் இந்தப் பிடிவாதம் நிலைத்து நிற்குமா அல்லது தளர்ந்து போகுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் செயற்பாடுகளால், அதன் தலைமையைப் பிடிக்காத பல நாடுகள் இருந்தன. ஆனாலும் இந்த நாடுகள் எதுவுமே நவநீதம்பிள்ளைக்கு எதிராக குரல் கூடக் கொடுக்கவில்லை. மற்றெல்லா நாடுகளும் மௌனமாக இருந்தது ஆச்சரியமல்ல. இலங்கை எதற்காக அமைதியாக இருந்து, அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயங்கியது என்ற கேள்வி முக்கியமானது.**

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் தாமதம்

# இந்தியா, அமெரிக்கா நாட்டைப் பிரிக்கும்

## – எச்சரிக்கிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைவாக வழங்காது அரசாங்கம் காலத்தை கடத்துமாக இருந்தால், அமெரிக்காவும் இந்தியாவும் தலையீடுகளை மேற்கொண்டு நாட்டை இரண்டாகப் பிரிக்கும் நிலை உள்ளதாகவும், எனவே யதார்த்த நிலையை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டுமெனவும் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்ததும் வடக்கின் பிரச்சினைகளை அரசு புரிந்து கொள்ளவில்லை. திருமணத்திற்கு கூட இராணுவத்தின் அனுமதியினை வடக்கு தமிழர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் இந்த நிலை சிவில் உரிமைகளின் அடிப்படை தன்மையை கேள்விக் குறியாக் கிவிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கூறுகையில்;

அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அடையாளம் காணப்பதில்லை. உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களை கடந்துள்ள நிலையிலும் இன்னும் மீள்குடியேற்ற பிரச்சினைகளையோ அம்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையோ தீர்த்து வைப்பதில் அரசு முன்னேற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக வடக்கு மக்களுக்கு தொடர்ந்தும் இராணுவ கெடுபிடிகளை அதிகரிக்கச் செய்து சிவில் நிர்வாகத்திற்கும் ஜனநாயகத்திற்குமான சூழலை முற்றாக புறக்கணித்து வருகின்றது.

இதனால் நாட்டில் மீண்டும் இனவாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்குமான சூழல் ஏற்பட்டு வருகின்றது. அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் சிங்கள இனவாதக் கட்சிகளின் கருத்துக்களால் இன நல்லிணக்கம் என்ற விடயம் கேள்விக்குறியாகி விட்டுள்ளது. எவ்வாறாயினும் தற்போது அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இலங்கை பிரச்சினைகளை கடும் போக்குடன் கையாள்கின்றமை நாட்டின் இறையாண்மைக்கு சாதகமான விடயமாக கருத முடியாது.

வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்து இம்மாகாணங்களை இலங்கையிலிருந்து பிரித்து வேறுவொரு தனி நாடாக பிரகடனப்படுத்தக்கூடிய நிலைகூட உள்ளது. எனவே அரசாங்கம் சூழலை புரிந்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் போலியாக பிசாரங்களை செய்ய முடியாது. வடக்கு மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும். இதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஆட்கடத்தல் காரர்களுக்கு அவுஸ்ரேலியாவில் புகலிட அந்தஸ்து

அவுஸ்ரேலியாவில் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் மோசடியான முறையில் புகலிட அந்தஸ்து பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையைச் சேர்ந்த சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் போலியான முறையில் புகலிட அந்தஸ்து பெற்றுக் கொண்டு இயங்கி வருகின்றனர்.

இந்த நடவடிக்கை குறித்து மாநில அரசாங்கங்கள் அறிந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. படகு மூலம் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களும் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இணைந்து அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்துள்ளனர். இந்த ஆண்டில் 3700 புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு மூலம் அவுஸ்ரேலியாவை அடைந்துள்ளனர்.

தமிழ் புலம்பெயர் மக்களின் ஒத்துழைப்புடன் அவுஸ்ரேலியாவில் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் இயங்கி வருகிறது. கடன் அட்டை மோசடி உள்ளிட்ட பல்வேறு மோசடி நடவடிக்கைகளுடன் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தொடர்பு இருப்பதாக அவுஸ்ரேலிய பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் கடன் அட்டை மோசடிகளின் மூலம் குறைந்தபட்சம் 6.5 மில்லியன் டொலர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடன் அட்டை மோசடியுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 20 பேரில் 19 பேர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறைக் கைதிகளிடமிருந்து 42 தொலைபேசிகள் மீட்பு



கொழும்பு மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்களிடம் இருந்து 42 கையடக்க தொலைபேசிகளும், சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட தொலைபேசிகளில் 4 தொலைபேசிகள் செய்மதி தொலைபேசிகள் எனவும் வீடியோ எடுக்கக் கூடிய வசதிகள் அதில் இருந்தாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் புலிச்சந்தேக நபர்கள் சிறையில் வைத்து படம்பிடித்த வீடியோ காட்சிகள் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. வீடியோ காட்சிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் திட்டம் இருந்தமை தொடர்பான தகவல்களும் கிடைத்துள்ளன.

கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருந்த சந்தேக நபர்களிடம் சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதுடன் அவர்கள் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

சிறைச்சாலையில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களை இந்த சந்தேக நபர்கள் வீடியோவில் பதிவு செய்துள்ளதுடன், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட உண்ணா நிலைப் போராட்டத்தையும் இவர்கள் பதிவுசெய்துள்ளனர். இவர்களின் இந்த நடவடிக்கைக்கு சிறை அதிகாரிகள் சிலரின் உதவிகள் கிடைத்திருக்கக்கூடும் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.ஓ.சி.யின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த அதிகாரமில்லை

## என்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

இந்திய எண்ணெய் நிறுவனமான ஐ.ஓ.சி நிறுவனம் மேற்கொள்ளும் எரிபொருள் விலையுயர்வுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்கு இல்லை என்று இலங்கை பெற்றோலியத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் டீசலின் விலையை 2 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐ.ஓ.சி.யின் நிர்வாகமே மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் கேள்வி ஒன்றுக்கே அமைச்சு இந்தப் பதிலை வழங்கியுள்ளது.

இந்திய நிறுவனம் டீசலின் விலையை உயர்த்தியது தொடர்பில் இலங்கை அரசாங்கம் வெட்கப்படவேண்டும் என்று ஜயலத் ஜயவர்த்தன குறிப்பிட்டிருந்தார்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி ஐ.ஓ.சி எரிபொருளின் விலையை சுயாதீனமாக அதிகரிக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# புலம் பெயர்ந்த மக்கள் எவரும் வட, கிழக்கிற்கு உதவவில்லை

## சிவாஜிலிங்கம் குற்றச் சாட்டு

(கொழும்பு)



புலம்பெயர் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு போதியளவு உதவிகளை வழங்கத் தவறியுள்ளதாக ரெலோ கட்சியின் தலைவர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றை அமைக்க வேண்டுமென் சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரியிருந்தார். அதற்கு கட்சியின் தலைமை உரிய பதிலளிக்கவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதியளவு உதவிகள் வழங்கப்படுவதில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புலம்பெயர்மக்கள் போதியளவு முதலீடுகளைச் செய்வதில்லை.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடம் தேவையான எவு பணம் காணப்படுகிறது. அவற்றை அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதலீடு செய்வதில்லை என்றார்.

# மின்சார சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

நிறைவேற்று தர அதிகாரிகளுக்காக வழங்கப்பட்ட வேதன அதிகரிப்பு தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி இலங்கை மின்சார சபையின் ஏனைய சேவையாளர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தத் தகவலை இலங்கை மின்சார சேவையாளர் சங்க செயலாளர ரஞ்சன் ஜயலால் வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக இன்று சகல தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைக்கும் வகையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

இதன்போது, தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பான இறுதி தீர்மானம் எட்டப்படும் என இலங்கை மின்சார சேவையாளர் சங்க செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

# போரின் பின்னர் மத மறுமலர்ச்சி; இளைஞர்கள் தியான வகுப்பில்

## பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார்



போரின் பின்னர் நாட்டில் மத மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மதம் தொடர்பான அக்கறை அதிகரித்துள்ளது. இளைஞர் யுவதிகளை நல்வழிப்படுத்த மதம் தொடர்பான விழிப்புணர்வு அவசியமானது.

நாடு, சமூகம், மக்கள் தொடர்பில் வெளிநாட்டுச் சக்திகள் பிழையான ஓர் பிரசாரத்தை செய்ய முயற்சிக்கின்றன. எனினும், இளைஞர் யுவதிகளில் பலர் தியான வகுப்புக்களில் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு சமூகத்தில் பாரியளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது என கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# புலிகளுக்கு பணம் அனுப்பிய 2 ஆலயங்களுக்கு அபராதம்

கனடாவில் விடுதலைப் புலிகளுக்கு பணம் அனுப்பி வைத்த இரண்டு இந்து ஆலயங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு இந்து ஆலயங்களினதும் நிர்வாகிகள் கடந்த 2004 ஆம் ஆண்டில் புலிகளுக்கு பணம் அனுப்பி வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் போது தகுதியற்ற அறக்கட்டளைகளுக்கு பணம் அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ரிச்மன்ட் ஹில் இந்து ஆலயம் மற்றும் மஷிசாகுவா இந்து ஆலயம் ஆகியவற்றுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

முறையே 140000 மற்றும் 300000 டொலர் என்ற அடிப்படையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த இரண்டு ஆலயங்களினதும் அறக்கட்டளைகள் தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு பணம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து வந்த அமைப்பு என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற போது 70 வீதமான தமிழர் பிரதேசங்களே பாதிக்கப்பட்டதாகவும், கிடைக்கப் பெற்ற உதவிகளில் 80 வீதமானவை தென்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் ரிச்மன்ட் ஹில் ஆலயத்தின் செயலாளர் மணிக் அம்பிகாபதி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் பணம் அனுப்பி வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். கனடாவின் வருமான முகவர் நிறுவனத்தினால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**சரத் பொன்சேகாவின் விடுதலையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கம் வகிக்கும் கட்சிகளைத் தவிர மற்றைய பெரும்பாலான**

# பொன்சேகா தலைமையில் புதிய சிங்களவாத அணி?

**- சிவா சுப்பிரமணியம் கட்டுரையிலிருந்து.**



சரத் பொன்சேகாவின் விடுதலையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கம் வகிக்கும் கட்சிகளைத் தவிர மற்றைய பெரும்பாலான கட்சிகள் வரவேற்றிருக்கின்றன. இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த காலத்தில் அவர் வெளியிட்ட இனவாதக் கருத்துகளைப் புறந்தள்ளி ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவைத் தீவிரமாக ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தனும் வரவேற்றிருக்கின்றார்.

பொன்சேகாவுக்கு விடுதலை என்பதை நினைத்துப் பார்க்கவும் விரும்பாதிருந்த அரசாங்கம் அவரை இப்போது விடுதலை செய்ததற்கும் இலங்கை அரசாங்கத்தின் கையை முறுக்கும் காய்நகர்த்தலை அமெரிக்கா மேற்கொள்வதற்கும் தொடர்பு இல்லை எனக் கூற முடியாது. தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் காரணமாகப் பொன்சேகாவை ஜனாதிபதி விடுதலை செய்த போதிலும் அதிலும் அரசியல் செயற்படாமலில்லை.

பொன்சேகாவின் தலைமையில் புதிய அணியொன்று உருவாகித் தேர்தல் களத்துக்கு வர வேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. அப்படி அமைவது அரசாங்கத்துக்கு எதிரான வாக்குகள் பிளவுபடுவதற்கு வழிவகுக்கும் என்றும் அதன் மூலம் தங்களுக்கு வாய்ப்பான சூழ்நிலை உருவாகும் என்றும் அரசாங்கத் தரப்பினர் கருதுகின்றார்கள்.

ஐக்கியதேசியக் கட்சி அதிருப்தியாளர்களுக்கும் பொன்சேகாவுக்கும் இடையிலான கூட்டு இரண்டு வடிவங்களை எடுக்கலாம். பொன்சேகாவின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்களையும் உள்ளடக்கிய புதிய அணியொன்று உருவாகலாம். அல்லது பொன்சேகா ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டு ரணிலின் தலைமைக்குச் சவால் விடுக்கும் நிலை தோன்றலாம். இதில் எது நடந்தாலும் தமிழ் மக்களின் நம்பிக்கையைத் தோற்றுவிப்பதாக இருக்காது.

கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாச மற்றும் பண்டார போன்றவர்கள் சிங்களக் கடுங் கோட்பாட்டு நிலைப்பாட்டுடன் தங்களை இனங்காட்டுபவர்கள். அதிருப்தியாளர்களுள் சிரால் லக்திலகவைத் தவிர மற்றவர்கள் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றி எந்தக் காலத்திலும் பேசாதவர்கள். இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் சரத் பொன்சேகாவும் இனவாதக் கருத்துகளைத் தாராளமாக அள்ளி வீசியவர்.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து பார்க்கும் போது பொன்சேகாவை முன்னிலைப்படுத்தும் அணி சிங்களவாத அணியாக இருப்பதற்கான சாத்தியக் கூறுகளே கூடுதலாக உள்ளன.

சரத் பொன்சேகாவின் விடுதலை மூலம் தமிழ் மக்களுக்கு என்ன விமோசனத்தை எதிர்பார்த்துச் சம்பந்தன் வரவேற்றாரோ தெரியவில்லை. தமிழ் மக்கள் வெளிநாட்டுத் தலையீடு இடம்பெறும் வரை பொறுமை காக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாநாட்டில் சம்பந்தன் கூறியது சமகால யதார்த்தத்துக்குப் பொருத்தமற்ற கூற்று.

தென்னிலங்கையில் என்ன நடந்தாலும் எங்களுக்கு அக்கறை இல்லை என்று கண்ணை மூடிக் கொண்டிருக்காமல் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுக்கு நேசக் கரம் நீட்டி இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை அடைவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் பணியில் தலைவர்கள் தாமதமின்றி ஈடுபட வேண்டும். நின்று நிலைக்கும் அரசியல் தீர்வை அடைவதற்கு இதை விட வேறு வழி இல்லை. வெளிநாட்டுத் தலையீடு என்ற இலவம் பழத்துக்காகப் பொறுமை காப்பது தற்கொலைக்குச் சமன்.

# நீங்கள் எப்படிப்பட்ட மனிதர்...

எலியா, புலியா? மற்றவர்களுக்காக, விட்டுக் கொடுப்பவரா? விட்டுக் கொடுத்துவிட்டு விழிப்பவரா அல்லது பெருமைப்படுபவரா? நீங்கள் உங்கள் உரிமையை எந்த அளவுக்குக் காப்பாற்றிக் கொள்கிறவர் என்பதை, அறிந்துகொள்ள இதோ பத்துக் கேள்விகள்...

**1.** நீங்கள் பஸ்சுக்காகவோ, சினிமாவுக்காகவோ கியூவில் நிற்கிறீர்கள். உங்களை முந்தியபடி ஒருவர் புகுந்தால் -

(அ) சங்கடப்பட்டு பேசாதிருப்பீர்களா?

(ஆ) அவருக்கு முன்னாலேயே நீங்கள் நிற்பதை எடுத்துக் கூறுவீர்களா?

(இ) அவருடைய செய்கையைப் பற்றி மூன்றாமவரிடம் உரக்க முணுமுணுப்பீர்களா?

**2.** உங்கள் நண்பருக்கு, எப்போதோ ஒருமுறை நீங்கள் உதவி செய்தீர்கள். அதுதான் சாக்கு என்று அடிக்கடி அவர் உங்களிடம் உதவி எதிர்பார்க்கத் தொடங்கினால் -

(அ) அவர் கேட்கும் போதெல்லாம் தட்டிக் கழிப்பீர்களா?

(ஆ) வேண்டா வெறுப்பாக மீண்டும் உதவி செய்வீர்களா?

(இ) அப்பட்டமாக மறுப்பீர்களா?

**3.** நாணயமற்றதென நீங்கள் கருதும் ஒரு செயலைச் செய்யும்படி, உங்கள் முதலாளி சொல்கிறார். அப்போது -

(அ) அந்தக் காரியத்தைச் செய்யாமல் முடிந்தவரை தள்ளிப் போடுவீர்களா?

(ஆ) "முதலாளியின் பொறுப்பு நமக்கென்ன!" என்று அவர் கூறியபடி செய்வீர்களா?

(இ) "முடியாது!" என்று மறுத்து, ஏன் என்பதையும் விளக்குவீர்களா?

**4.** ஒரு பொருள் வாங்க வேண்டி நுழைந்த கடையில், சிப்பந்தி உங்களைக் கவனியாமலிருந்தால்...

(அ) உங்களை அவர் கவனித்து விசாரிக்க வரும் வரை காத்திருப்பீர்களா?

(ஆ) இனிமையாக அவரை கூப்பிடுவீர்களா?

(இ) வேறு கடையை நாடிப் போவீர்களா?

**5.** சாயம் போகாது என்ற உத்தரவாதத்துடன் கொடுக்கப்பட்ட துணி, சலவையில் வெளுத்துப் போய் வந்தால் -

(அ) அதைக் கொடுத்த துணிக்கடைக்கு எடுத்துப் போவீர்களா?

(ஆ) தூக்கி எறிந்து விடுவீர்களா?

(இ) நண்பர்களிடம் முணுமுணுத்து விட்டு ஏதாவது பத்திரிகைக்கு புகார் கடிதம் எழுதிப் போடுவீர்களா?

**6.** உங்களுக்குப் பிடித்தமான ஓர் ஆடையைப் பற்றி நண்பர்கள் கேலி செய்தால் -

(அ) அதை அணிந்து கொள்வதை விட்டு விடுவீர்களா?

(ஆ) கிண்டலைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அணிந்து கொள்வீர்களா?

(இ) கேலி செய்பவர்களிடமிருந்து ஒதுங்கி, வேறு நண்பர்களைப் பிடிப்பீர்களா?

**7.** உங்களுடைய விலையுயர்ந்த பொருளை, "ஓசி" வாங்கிச் சென்றவர், அதைக் கெடுத்து குட்டிச் சுவராக்கித் திரும்பக் கொடுத்தால் -

(அ) அதைத் திருத்துவதற்கான செலவைத் தரும்படி, இரவல் பெற்றுச் சென்றவரைக் கேட்பீர்களா?

(ஆ) ஒன்றும் கேட்காமல் புழுங்குவீர்களா?

(இ) நீங்களே திருத்தி விட்டு, இனி எவருக்கும், எதுவும் இரவல் தருவதில்லை என்று தீர்மானிப்பீர்களா?

**8.** நீங்கள் விடுமுறை நாட்களில் வெளியூருக்கு உங்கள் குடும்பத்தை அழைத்துச் செல்வது -

(அ) எப்போதாவதா?

(ஆ) ஒவ்வோர் ஆண்டுமா?

(இ) எப்போதுமே கிடையாதா?



**9.** உங்களுடைய அருமை நண்பர் ஒருவரை உங்கள் மனைவிக்கு (அல்லது கணவருக்கு) பிடிக்கவில்லை என்றால் -

(அ) நண்பரது நட்பை விட்டு விடுவீர்களா?

(ஆ) ரகசியமாக அவருடன் நட்பு வைத்துக் கொள்வீர்களா?

(இ) மனைவியிடம் (அல்லது கணவரிடம்) அவருடைய அர்த்தமில்லாத பிடிவாதத்துக்காக ஒரு நண்பரை இழக்கத் தயாராயில்லை என்று சொல்லி விடுவீர்களா?

**10.** ரயிலில் இடம் தேடி ஓடிக் கொண்டிருக்கையில் முன்பதிவு செய்யாத இருக்கையில் ஒருவர் படுக்கை விரித்திருப்பதை பார்க்கிறீர்கள். உடனே -

(அ) ரயில்வே அதிகாரியை வரவழைத்து இதைச் சுட்டிக் காட்டுவீர்களா?

(ஆ) யாராவது ரயில்வே அதிகாரி வந்து கவனிக்கட்டும் என்று காத்திருப்பீர்களா?

(இ) நீங்களே படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டு உட்காருவீர்களா?

மேற்கண்ட பத்து கேள்விகளுக்கும் உங்கள் பதில்களைக் குறித்துக் கொண்டீர்களா?

இந்த கேள்வித்தாளுக்கு மொத்தம் 100 புள்ளிகள்... ஒவ்வொரு விடைக்கும் 10 புள்ளிகள்.... "ஆம்" போட வேண்டிய விடைகள்:

1இற்கு - ஆ; 2இற்கு - இ; 3இற்கு - இ; 4இற்கு - ஆ; 5இற்கு - அ; 6இற்கு - ஆ; 7இற்கு - அ; 8இற்கு - அ; 9இற்கு - இ; 10க்கு - அ.

இப்போது நீங்கள் 10 புள்ளிக[ள்] வாங்கிய கேள்விகள் எத்தனை என்று பாருங்கள்.

நீங்கள் எடுத்த புள்ளிகள், 70 முதல் 100 ஆக இருந்தால், நீங்கள் சுதந்திர மனிதர். நேர்மையற்ற எவரும் உங்களிடமிருந்து தப்ப முடியாது.

40 முதல் 60 ஆக இருந்தால் நீங்கள் வம்பு, தும்புக்கு போகாத மனிதர். உங்கள் உரிமையை நிலை நாட்டிக் கொள்ள சிறிது அஞ்சுபவர்.

உங்கள் மதிப்பெண், 30க்கு கீழே இருந்தால், நீங்கள் மிகவும் அடங்கி, ஒடுங்கிப் போகிற ஆசாமி. எல்லாரும் உங்களை நசுக்குகின்றனர்... ஆனால், கலங்காதீர்கள்... அடுத்தடுத்துச் சீண்டினால் புழு கூட முறைக்குமே!

## ஓவியங்களால் உருவாக்கப்பட்ட கம்பளம்

மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவில், ஈஸ்டர் பண்டிகையை வித்தியாசமாகவும், வண்ணமயமாகவும் கொண்டாடுகின்றனர். வீட்டுக்கு முன், அழகழகான கோலங்களை போடுவது போல், கவுதமாலாவில், கண்ணை கவரும் வகையில், தரையில் கம்பளம் விரிக்கப்பட்டது போன்ற ஓவியங்களை வரைகின்றனர். ஒருவித மண், மரத்தூள் ஆகியவற்றை கலந்து, வீதிகளில் மிக நீண்ட தூரத்துக்கு இந்த ஓவியங்களை வரைகின்றனர். வரைந்து முடித்தவுடன், அவற்றின் மீது, பல்வேறு விதமான மலர்கள், செடி கொடிகளை வைத்து, அந்த ஓவியங்களை மேலும் அழகு படுத்துகின்றனர். இதைப் பார்க்கும்போது, மிக நீண்ட தூரத்துக்கு, அழகான கம்பளம் விரிக்கப்பட்டது போன்று தோன்றும். ஈஸ்டர் தினத்தன்று, இந்தச் கம்பளத்தின் மீது, மிக பிரமாண்ட இயேசு சிலைகளுடன், ஊர்வலமும் நடத்தப்படுகிறது. இதைக் காண்பதற்காக, வெளிநாடுகளில் இருந்தும், ஏராளமான சுற்றுலாப் பயணிகள், ஈஸ்டர் பண்டிகையின்போது, கவுதமாலாவில் குவிந்து விடுகின்றனர். இங்குள்ள மக்களுக்கு ஒரே ஒரு கவலை... இரவு, பகலாக கண் விழித்து, வரையப்படும் இந்த ஓவியங்களை, சில நேரங்களில், மழை பெய்து, அழித்து விடுவதுதான்.



# சினிமா சினிமா



ஹிந்தியில் உருவாகும், "பெராலி கீ சவாரி" என்ற படம், பெரிய கிரிக்கெட் வீரனாக வேண்டும் என்று கனவு காணும் ஒரு சிறு-வனைப் பற்றிய கதை. இப்படத்தில், ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர். ஐ.பி.எல். போட்டிகள் முடிந்ததும், இதன் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார் சச்சின்.



விஸ்வரூபம் படப்பிடிப்பு நடந்தபோதே, அப்படத்தின் இரண்டாம் பாகத்துக்கான பல காட்சிகளைப் படமாக்கி விட்டதாக சொல்கிறார் கமல். மேலும், "அடுத்த பாகத்துக்கான, 20 சதவீதம் ரிஸ்க்கான காட்சிகளை இப்போதே படமாக்கி விட்டதால், இரண்டம் பாகத்தை சீக்கிரமே முடித்து விடுவேன்..." என்று சொல்லும் கமல், முதல் பாகத்தைப் போலவே இரண்டாம் பாகத்தையும் தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளுக்கும், தனித்தனியே காட்சிகளைப் படமாக்குகிறார்.



"ஃபோர்ப்ஸ்" பத்திரிகை ஆண்டுதோறும் வெளியிடும் "சக்தி வாய்ந்த பிரபலங்கள்" பட்டியலில் கடந்த ஆண்டு ஐம்பதாவது இடத்தில் இருந்த பொப் பாடகி ஜெனீஃபர் லோபஸ் இந்த ஆண்டு முதலிடத்தைப் பெற்றுள்ளார். 700 கோடி ரூபா ஆண்டு வருமானம், சூப்பர் ஹிட் அல்பங்கள், ட்விட்டரில் 70 இலட்சத்துக்கும் மேற்பட்ட பின்தொடர்வோர் போன்றவைதான் முதலிடத்துக்குக் காரணம்.

"நம்ம ஊரு நல்ல ஊரு" படத்தின் மூலம் ராமராஜனை அறிமுகப்படுத்தியவர் வி.அழகப்பன்.




அதையடுத்து சில படங்களைத் தயாரித்துவிட்டு திரைத்துறையில் இருந்து ஒதுங்கிவிட்டார். தற்போது அவருடைய மகன் யுவராஜ் அழகப்பன் "கலியுகம்" படத்தின் மூலம் இயக்குநர் ஆகிறார். சசியிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய அனுபவம் கை கொடுக்க ஒரு நெகிழ்ச்சியான கதையோடு களமிறங்குகிறார் யுவராஜ். இந்தப் படத்தில் தாஜ் நூர், சித்தார்த் விபின், எஸ்.என்.அருணகிரி என மூன்று இசையமைப்பாளர்கள் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

# உலக ஆதிக்க சக்திகளிடம் விசுவாசமும் உள்ளூரில் ஆதிக்க அரசியல் விருப்பமும்

- காலகண்டன் கட்டுரையிலிருந்து.

இன உரிமைகளை வென்றெடுப்பது எனக் கூறி இன உணர்ச்சியை எழுச்சிப்படுத்தி முன்னெடுத்த அனைத்து இயக்கங்களும் வடக்குக் கிழக்கின் நாடாளுமன்ற ஆசனங்கள் அனைத்தையும் தமதாக்கிக் கொள்ளும் இலட்சியத்தையே கொண்டிருந்தன. கறுப்புக்கொடி, கடையடைப்பு, திரும்பிப்போ, ஸ்ரீ எதிர்ப்பு, சிறை நிரப்பு, சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், பதவி துறப்பு, அரசியல் சட்ட எரிப்பு, துரோகிகள் அழிப்பு போன்றன தமிழரசுக் கட்சியால் முன்னெடுக்கப்பட்டு வந்தவைகளாகும்.

இவை தமிழ் இளைஞர்களையும் தமிழ் மக்களில் பெரும்பகுதியினரையும் இனவுணர்வுப்படுத்தியதும் எழுச்சி கொள்ள வைத்ததும் உண்மையாயினும் எதிர்நிலையிலே பேரினவாதத்தைச் சக்திப்படுத்தி ஆளும் அதிகார அரங்கிலே அதனை வலுப்படுத்தவே உதவியது. அதுமட்டுமன்றி முடிந்த முடிவாக முன்வைக்கப்பட்ட தமிழீழக் கொள்கைப் பிரகடனத்தின் உரிமையாளர்களும் தமிழரசுக் கட்சியினரே ஆவர். முப்பது வருட அகிம்சைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டத் தடத்திற்கு கைமாற்றிக் கொடுத்து இந்தியா அதற்கு உதவும் என்ற நம்பிக்கையை வழங்கியவர்களும் தமிழரசுக் கட்சியினர்தான்.

எனவே முப்பது வருட யுத்தத்தைப் பேரினவாத ஆளும் கட்சிகள் இரண்டும் முன்னெடுத்து வடக்கு, கிழக்கை அழித்துக்கொண்ட உண்மையை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை அந்த அழிவில் தமிழரசுக் கட்சியின் பொறுப்புக்கூறலை எவ்வகையிலும் தட்டிக்கழித்துவிட முடியாது.

ஆனால், 14 ஆவது மாநாடு நடத்திய தமிழரசுக் கட்சி அவ்வாறான பொறுப்புக்கூறலைக் கொண்டிருக்கவில்லை. யுத்தத்தில் இறந்து போனவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதேயன்றி அதற்குத் தாங்களும் காரணமானவர்களே என்பதையிட்டு தமது தவறான கொள்கை நிலைப்பாட்டிற்காக துளியளவும் விமர்சன வருத்தத்தைத் தெரிவிக்கவில்லை.

அதுமட்டுமன்றி சம்பந்தனது நீண்ட உரையில், இறந்து போனோரது தொகையை மிகக் குறைவானதாகவே காட்டியுள்ளார். போராளிக-ளாகக் களம் இறக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் என்போரது இறப்பு எண்ணிக்கை சுமார் அறுபதினாயிரத்திற்கு மேலாகும். இறுதி யுத்தத்தில் நாற்பதினாயிரம் பேர் என்றே ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை குறிப்பிடுகிறது. இவற்றுடன் யுத்தம் தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு கட்டத்திலும் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சத்திற்கு மேலாகும்.

எவ்வாறாயினும் வடக்கு, கிழக்கில் இரண்டரை இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களை தமிழ்ப் போராட்டமும் அதற்கெதிரான பேரினவாத யுத்தமும் விழுங்கி விட்டது. இந்நிலைக்கு சம்பந்தன் தனது நீட்டி வாசித்த உரையில், காரணம் யார் என்பது பற்றிக் குறிப்பிடவே இல்லை. தமது தவ-றான அரசியல் வழிகாட்டல்களும் கொள்கைப் பிசகுகளும் நடைமுறைச் சாத்தியமற்ற வழிமுறைகளும் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தையும் பாழ் நிலைக்குக் கொண்டு சென்றமை பற்றி எவ்வித குற்ற உணர்வும் இன்றித் தம்மைத் தொடர்ந்து தலைமைப் பாத்திரத்தில் வைத்திருக்குமாறே கேட்டுக் கொண்டார்.

தாங்களே தமிழ் மக்களின் சட்டபூர்வமான பிரதிநிதிகள் என்பதை வலியுறுத்திய சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சி தமிழரசுக் கட்சிதான் என்பதனையும் வலியுறுத்தத் தவறவில்லை. இது பழைய நிலைப்பட்ட ஆதிக்க அரசியலின் வெளிப்பாடே அன்றி இன்றைய சூழலில் வகுத்தெடுத்து முன்செல்ல வேண்டிய தூர நோக்கிலான கொள்கை நிலைப்பாடு சார்ந்த ஒன்று அல்ல...



கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழர் அரசியல் அரங்கில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு தமிழ்த் தலைவர்களையும் அவர்கள் தலைமை தாங்கிய கட்சிகளையும் தமிழ் மக்கள் நம்ப வேண்டும் பின்பற்ற வேண்டும் என்றே கேட்கப்பட்டனர். எங்களுக்கும் எங்களது கட்சிக்கும் வாக்களித்தால் எங்களால் இன உரிமைகளை வென்றெடுத்துத் தர முடியும் என்றே கூறப்பட்டு வந்தது.

இதுவே பின்பு ஆயுதப் போராட்ட இயக்கங்களிலும் பின்பற்றப்பட்டு வந்தது. இதன் உச்சமே புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் பிரபாகரனையும் நம்புமாறு கேட்கப்பட்டதாகும்.

அதற்கு நடந்த கதிதான் மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்தேறியது. அவர்கள் அழிவுற்றது மட்டுமன்றி தம்மை நம்பிச் சென்ற மக்களையும் அழிவுக்குள்ளாக்கினர் என்ற குற்றச்சாட்டு அவர்களுக்குரியதாகியது.

இவ்வாறு தனித் தலைமையும் அதன் தலைவர்களது தனி ஆற்றலும் தமிழ் மக்களுக்கு உரிமைகளையும் விடுதலையையும் கொண்டுவந்துவிடும் என்பது ஒரு தவறான சிந்தனை வழிவந்த அரசியல் மூட நம்பிக்கையாகும். அதன் அடிப்படையிலேயே தமிழரசுக் கட்சி மாநாட்டில் சம்பந்தனுக்குத் தலைப்பாகை சூடி பொன்னாடை போர்த்தி திலகமிட்டு உங்களை



மீட்க வந்த தலைவர் இவரே என்று தமிழ் மக்களுக்கு போக்குக் காட்டப்பட்டிருக்கிறது...

புதுடெல்லிக்கும் வெள்ளை மாளிகைக்கும் தாங்கள் காவடி தூக்கியதால்தான் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்று சம்பந்தன் கூறுகி-றார். ஆனால், அத்தீர்மானம் கூறுவது என்ன? அதாவது சம்பந்தனாலும் தமிழ்க் கூட்டமைப்பினாலும், 'பயன் அற்றது, தமிழ் மக்களுக்கு அதில் எதுவுமே இல்லை' என்று கூறி நிராகரிக்கப்பட்ட, கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறே அமெரிக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் என்ன அற்புதம் காணப்பட்டது என்பது சம்பந்தனுக்கே வெளிச்சம்.

அமெரிக்கா என்ன நோக்கத்திற்காக மிகக் கடுமையற்ற தீர்மானத்தை இலங்கைக்கு எதிராகக் கொண்டுவந்தது, அதனை ஏன் இந்தியா ஆதரித்துக் கொண்டது என்பது சம்பந்தனுக்கோ கூட்டமைப்புக்கோ இலகுவில் விளங்கக் கூடிய ஒன்றல்ல. ஏனெனில் வல்லாதிக்க நாடுகளை விசுவாசித்து அவர்கள் செய்வதெல்லாம் எமக்கானவை தான் என்ற அரசியல் மூடநம்பிக்கையில் இருப்பவர்களுக்கு வல்லாதிக்க சக்திகளின் மேலாதிக்க சூட்சுமங்கள் விளங்க நியாயமில்லை.

தனிநபர்கள் உலக பிராந்திய மேலாதிக்கங்களை நேசிப்பதும் விசுவாசிப்பதும் அவர்களது சொந்த விருப்பும் வேணவாவும் ஆக இருக்க முடியும். ஆனால், ஒரு முறைக்குப் பல தடவைகள் அடி வாங்கிய பின்பும் பாரிய அழிவுகளுக்கு உள்ளாகிய பின்பும் இந்திய, அமெரிக்க வல்லாதிக்க சக்திகளை நம்புமாறும் பொறுமை காத்து நிற்குமாறும் ஒடுக்குமுறைக்குள்ளாகி நிற்கும் ஒரு தேசிய இனத்தைக் கேட்பது எவ்வளவு கோழைத்தனமானதாகும்.

தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, அவற்றின் அடிப்படையிலான சுயாட்சி என்பனவற்றை விளக்கவோ அதன் அடிப்படையிலான ஒரு வெகுஜனப் போராட்டத்திற்கான பரந்துபட்ட மக்கள்சக்தியை அணிதிரட்டவோ தமிழரசுக் கட்சி தலைமை தாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இயலாது என்பதையே சம்பந்தன் ஐயாவின் உரை எடுத்துரைக்கின்றது.

அதுமட்டுமன்றி தேசிய இனப்பிரச்சினைக்குள் உள்ளடங்கி நிற்கும் முஸ்லிம், மலையகத் தேசிய இனங்கள் பற்றிய ஒரு தெளிவான பார்வையை வழங்குவதற்குப் பதிலாக வழமை போன்று தமிழ் பேசும் மக்கள் என்பதுடன் நிறுத்திக் கொண்டதையும் அவரது உரையில் காண முடிந்தது.

ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திற்கும் ஏனைய தேசிய இனங்களுக்கும் எது ஏற்படினும் எமக்கு அதுபற்றிய கவலை கிடையாது. எம்மை உங்களது நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தால் அதுவே போதுமானதாகும். எனவே அதற்காக ஐக்கியப்பட்டு ஒரே குடையின் கீழ் நிற்போம். மக்கள் யாவற்றையும் மறந்து எங்களுக்கே வாக்களித்து முதன்மைப் பிரதிநிதிகளாக இருக்கச் செய்வீர்.

அப்போதுதான் நமது பாரம்பரிய ஆதிக்க அரசியலை வடக்கு கிழக்கில் தொடர முடியும் என்ற செய்தியினையே மட்டக்களப்பில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாடும் சம்பந்தன் ஐயாவின் உரையும் வெளிப்படுத்தியுள்ளது.

# இரட்டைப் பதிவு வாக்காளருக்கு எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை

## தேர்தல் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு நபர் வேட்பாளராக பதிய வேண்டுமெயின் அவர் வசித்துவரும் முகவரியே பயன படுத்த வேண்டும் எனவும் இம் முறை வாக்காளர் மீள்பதிவின் போது திட்டமிட்டு ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளை செய்யும் வாக்காளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

சுமார் ஒன்றரை இலட்சம் வாக்காளர்கள் வரை 2011ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் மீள்பதிவின் போது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் தம்மைப் பதிவு செய்துகொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இந்த மேலதிக வாக்காளர்களை அல்லது ஒரு இடத்திற்கு மேற்பட்ட பதிவுகளை இரத்துச் செய்வதற்கு தேர்தல் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒரு இடத்திற்கு மேலதிகமாக தம்மை வாக்காளராகப் பதிவுசெய்யவேண்டாம் என மக்கள் போதுமானவு அறிவுறுத்தப்பட்டுள்ளதால் திட்டமிட்டு ஒரு இடத்திற்கு மேலதிகமாக பதியும் வாக்காளர்களுக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானத்துள்ளதாக செயலகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகங்கள் தற்போது ஒரே வலையமைப்பிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதால் ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் வாக்காளர்களாக பதிவு செய்துகொண்டவர்களை இலகுவாக கண்டறிய முடியும் எனவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

# பதுளை வைத்தியசாலையில் பெண் மருத்துவர் மர்ம மரணம்

(கொழும்பு)

பதுளை வைத்தியசாலையில் பணியாற்றி வந்த பெண் மருத்துவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு மருத்துவர்கள் தங்கும் விடுதியில் மர்மான முறையில் இறந்து கிடந்ததாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆர்.எம்.பிரியங்கா என்ற 27 வயதான மருத்துவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இதனையடுத்து, மரணத்திற்கான காரணத்தை அறிய உடல் பாகங்கள் அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் குறித்து பதுளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# வர்ணப்பூச்சில் ஈயத்தின் அளவு; புதிய விதிமுறைகள் அமுல்

(கொழும்பு)


வர்ணப் பூச்சுக்களில் அடங்கும் ஈயத்தின் அளவு தொடர்பில் புதிய விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கு நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார காரணங்களைக் கருத்திற்கொண்டு, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுற்றாடல் மற்றும் சுகாதாரம் தொடர்பான பணிப்பாளர் குறிப்பிட்டார்.

நுகர்வோர் அதிகாரசபை, சுகாதார அமைச்சு, சுற்றாடல் அமைச்சு உள்ளிட்ட பல பிரிவுகளுடன் கலந்தாலோசித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கமைய சிறுவர்கள் பயன்படுத்தும் விளையாட்டுப் பொருட்களுக்கு ஒரு கிலோ கிராம் வர்ணப்பூச்சுக்கு 90 மில்லிகிராம் ஈயம் பயன்படுத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுவர்களுக்கு பயன்படுத்தும் ஒருகிலோகிராம் வர்ணப்பூச்சுக்கு 90 மில்லிகிராம் ஈயமும், நிலத்திற்கு பூசும் ஒருகிலோகிராம் வர்ணப்பூச்சுக்கு 600 மில்லிகிராம் ஈயமும் கலக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்த விதிமுறைகள் அடுத்த வருடம் முதல் அமுலுக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டத்தரணிகளுக்கு மரியாதை பொலிஸ் மா அதிபர் பணிப்புரை

(கொழும்பு)

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளை பொலிஸ் நிலையங்களில் உரிய மரியாதை யோடு நடாத்தப்படல் வேண்டும். இதற்கான ஒழுங்கு விதிகளை பொலிஸ் மா அதிபர் வெளியிட்டுள்ளார்.

இதற்கேற்ப, தனது கட்சிக்காரரான சந்தேக நபர் சார்பின் பொலிஸ் நியைத்துக்கு வரும் சட்டத்தரணிகளை பொலிஸார் அன்புடனும் மரியாதையுடனும் நடாத்த வேண்டும். அந்தச் சட்டத்தரணிக்கு உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ பொலிஸார் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது என்று அந்த விதிகள் கூறுகின்றன.

தேசிய அடையாள அட்டை மற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையைக் கொண்டு சட்டத்தரணிகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

பொலிஸ் மா அதிபரின் இந்தப் பணியை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் எதிர்க் கட்சி எம்.பி.யுமாகிய விஜேதாச ராஜபக்ஷ வரவேற்றுள்ளார்.

# கொடுப்பனவுகளை வழங்கக்கோரி சேவைப் பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு பெற்றுகொடுக்க வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தும் பல்வேறுபட்ட சேவைப் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களை முன்னெடுக்க சுகாதார சேவை தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளதாக பிரதான செயலாளர் சமன் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒத்துழைப்பினை 15 சுகாதார சேவை தொழிற் சங்கங்கள் வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு முன்பாகவும் காலி கராப்பிட்டிய மருத்துவ மனைக்கு முன்பாகவும் இன்றைய தினம் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவிக்கையில், தொழிற்சங்கத்தை சேர்ந்த பிரதிநிதிகளுக்கான கொடுப்பனவு வழங்குவது குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் எனக் குறிப்பிடடார்.

# மாணவர் ஒன்றியங்கள் தடை அரசியல் சர்வாதிகாரமாகும்

## ஒன்றிய அமைப்பாளர் சஞ்சீவ தெரிவிப்பு



(கொழும்பு)

நாடு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்வதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார். மாணவர் அமைப்புகளை தடைசெய்யும் அரசாங்கத்தின் முயற்சியானது அரசியல் சர்வாதிகாரமாகவே கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வி கிடைக்க வேண்டும் என்பதே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நோக்கமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தடைகளையும் தாண்டி தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக கல்வி முறைமைக்கு குந்தகம் ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்த தனைத் தவிர, தமது அமைப்பு எவ்வித குற்றங்களையும் செய்ய வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களின் உரிமைகளுக்காக தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாற்றுக் கருத்துக்களை வகிப்போர் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

# மதத்தலைவர்களுக்கு தேர்தலில் தடை ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன?

## கேட்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

பிக்குகள் உள்ளிட்ட மதத் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள தனிநபர் சட்ட மூலம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

ජාතික හෙළ උරුමය
JATHIKA HELA URUMAYA
NATIONAL HERITAGE PARTY

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ இந்தச் சட்ட மூலத்தை கடந்த மே மாதம் 31 ஆம் திகதி சபையில் முன்வைத்ததாக ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.

சட்ட மூலத்தை முன்வைக்க நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை, செயற்குழுவின் அனுமதியைப் பெற்றாரா? என தெளிவுபடுத்தப்பட வேண்டும் என ஹெல உறுமய கோரியுள்ளது.

வாதப் பிரதிவாதம், இணக்கப்பாடு இன்றி இவ்வாறான சட்ட மூலம் முன்வைக்கப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.








யாழ். ஜோன் பொஸ்கோ கார்மேல் முன்பள்ளி மாணவர்களுக்கான 2012 ஆம் ஆண்டிற்கான கண்காட்சி நேற்றுப் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரை வரவேற்பதற்காக மலர்களுடன் மாணவர்கள் காத்திருப்பதையும், அவர்களை வரவேற்று பாடல் இசைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம். (படம்:சுமித்தி)

26. 

இறப்பர் மரங்களில் சிரட்டை கொழுவி வைக்கப்பட்டிருக்கும் இதற்கு காரணம்.
1. மரத்திற்கு நீர் ஊற்ற
2. மரத்தில் இருந்து பால் எடுக்க
3. சுலபமாக மரத்தில் ஏற

27. 

மரங்களில் காணப்படும் குருவிச்சை என்னும் தாவரம் ஒரு
1. ஒட்டுண்ணி 2. மாசிச உண்ணி



28. படத்தில் காட்டப்பட்டுள்ள தையல் அமைப்பின் பெயர் என்ன?

..................................................................


29. பின்வரும் பகுதியை வாசித்து தொடர்புபடுத்துங்கள்

| | |
|---|---|
| மூலைமுடுக்கு | ஒற்றுமை |
| இரவும் பகலும் | தோற்றம் |
| நகமும் தசையும் | எந்நேரமும் |
| எலும்பும் தோலும் | பொய் களவு |
| உருட்டும் புரட்டும் | முழு இடமும் |

30. பின்வரும் ஆங்கில சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.
1. LAMP .................................. 2. NIGHT..................................
3. FACE .................................. 4. ONE ..................................

31. சுதன் 3 பெரிய தோடம்பழங்களையும் சிறிய தோடம்பழங்களையும் ரூபா. 22.50 இற்கு வாங்கும்பொழுது சுதனின் அண்ணன் கஜன் 3 சிறிய தோடம்பழங்களை 13 ரூபா 50 சதத்திற்கு வாங்கினான். பெரிய தோடம்பழம் ஒன்றின் விலை என்ன?

..................................................................

32. 


முதல் வட்டத்தினுள் 2 இன் மடங்குகளும், இரண்டாம் வட்டத்தினுள் 3 இன் மடங்குகளும் எழுதப்பட்டுள்ளன. இரு வட்டங்களுக்கும் பொதுவான நிழற்றப்பட்ட பகுதியினுள் இருக்கவேண்டிய எண்கள் இரண்டினை எழுதுக.

..................................................................

33. ஒரு போத்தலினுள் 750 ml பால் கொள்ளும். அப்படியான 3 போத்தல்களிலுள்ள பாலை 1/4 l கொள்ளும் எத்தனை போத்தல்களினுள் நிரப்பலாம்?

..................................................................

34. பின்வரும் பந்தியை வாசிக்கவும்.

இராவணனின் விருப்பப்படி அவனது மாமனான மாரீசன் ஓர் அழகிய மான் உருவெடுத்துச் சீதையின் முன் நின்றான். அதனைப் பிடித்துத் தரும்படி சீதை வேண்டினாள். இராமன் அதனைப் பிடிக்கச் சென்றான். அது நெடுந்தூரம் ஓடியது. அதனால் இராமன் ஒரு அம்பை எய்தான். மான் இறந்தது. இறக்கும் போது “ இலக்குமணா” என உரத்து அழைத்தது. அந்தக் குரலைக் கேட்ட இலக்குமணன் இராமனுக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்ததோ என எண்ணி அத்திரை நோக்கி விரைந்து சென்றான்.,

மேலே கொடுக்கப்பட்ட விபரங்களை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

**35. மானின் மேல் விருப்பம் கொண்டது யார்?..................................................**

**36.. மானாக உருமாறியது யார்?..................................................**

**37. மானைப் பிடிக்கச் சென்றது யார்?..................................................**

ஒரு தொழிற்சாலையில் பெரியளவு (L), நடுத்தர அளவு (M), சிறிய அளவு (S) ஆகிய மூன்று வகையான பவுடர் ரின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு வியாபாரி L இல் 1 1/2 டசின்களையும் M இல் L ஐப் போல் 2 மடங்குகளையும், S இல் L ஐப் போல் 2 மடங்குகளையும் வாங்கினார்.

38. S வகை பவுடர்களில் எத்தனை வாங்கினார்?..................................................

39. **எல்லாமாக எவ்வளவு பவுடர் ரின்களை வியாபாரி வாங்கினார்?** ..................................................

40. L இன் விலை ஒன்று ரூபா12.50, M இன் விலை ஒன்று ரூபா 9.00, S இன் விலை ஒன்று ரூபா 5.00 ஆயின்





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
நேரம் -45 நிமிடம்

# கல்வி முரசு


வெளியீடு 78




**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**
**விடைத்தாள்கள் மதிப்பிடுகையில் தெளிவான கையெழுத்துக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.**

01. பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எண்கள் குறித்தவொரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. 3ஆவது சந்தர்ப்பத்தில் வெற்றுக்கட்டத்தினுள் எழுதப்படவேண்டிய எண்ணை எழுதுங்கள்.




1ஆவது சந்தர்ப்பம் 2ஆவது சந்தர்ப்பம் 3ஆவது சந்தர்ப்பம்

02. 


சிறுவன் ஒருவன் படத்தில் உள்ளவாறு வரைந்து A யில் இருந்து ஆரம்பித்து மூவடி வலஞ்சுழியாகவும் ஈரடி இடஞ்சுழியாகவும் பாய்கிறான். இதற்கு ஏற்ப அவன் வலஞ்சுழியாக நான்காவது தடவை பாயும்போது எக்கூட்டினுள் நிற்பான்?

..................................................................

03. கீழே தரப்பட்டுள்ள விலைகளுக்கேற்ப இங்கு தரப்பட்ட உண்டியலை நிரப்புக.

| விலைப்பட்டியல் | பண்டம் | அளவு | விலை | |
|---|---|---|---|---|
| | | | ரூபா | சதம் |
| சீனி 1kg ரூ 34.00 | சீனி | 250g | ------------ | ------------ |
| எண்ணைய் 1l ரூ 25.00 | எண்ணெய் | 200ml | ------------ | ------------ |
| சேட் துணி 1m ரூ 56.00 | சேட் துணி | ½ m | ------------ | ------------ |

04. 12 ஒரே அளவுள்ள குப்பிகளில் உள்ள மருந்தை ஒரு பெரிய போத்தலில் நிரப்பலாம். அவ்வாறான 10 பெரிய போத்தலிலுள்ள மருந்தை ஒரு பிளாஸ்ரிக் கானில் நிரப்பலாம் எனின் அவ்வாறான 3 பிளாஸ்ரிக் கானை நிரப்புவதற்கு எத்தனை குப்பிகளில் உள்ள மருந்து தேவை?

..................................................................

05. ஒரு தொட்டியில் உள்ள நீரின் அளவு 7/9 பங்கு ஆகும். அதில் 4/9 பங்கு குளிப்பதற்கு மிகுதியில் ஒரு பகுதி சமையல் பகுதிக்கும் பயன்படுத்தப்பட்ட பின்னர் 1/9 பங்கு மீதமாக உள்ளது எனின், சமையல் பகுதிக்கு பயன்படுத்தப்பட்டது தொட்டியின் என்ன பங்காகும்?


..................................................................

06. புகைவண்டி மு.ப.10.30 இற்கு புறப்பட்டு மணித்தியாலத்திற்கு 60 km சீரான வேகத்தில் சென்று பி.ப 2.30க்கு போய் சேர்ந்தது எனின் புகைவண்டி சென்ற தூரம் யாது?

..............................................................................................................

07. 3கொப்பியினதும், 3 பென்சிலினதும் விலை ரூ.36 ஆகும். பென்சிலின் விலை கொப்பியின் விலையிலும் 3 ரூபா குறைவு ஆகும். எனின் 2 பென்சிலின் விலையையும் காண்க.

..............................................................................................................

08. 


இப்படத்தில் காட்டப்பட்டுள்ள 1, 2, 3, 4, 5 வரை எண்ணிடப்பட்ட துண்டுகளைப் பயன்படுத்தி ஒரு சதுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அருகில் தரப்பட்ட உருவத்தை பூர்த்தி செய்ய இத்துண்டில் உள்ள எண்களைப் பயன்படுத்துக.

09. P, Q என்ற தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யப்பட்ட ரயர்களின் எண்ணிக்கையை பின்வரும் படம் காட்டுகிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| P | ● | ● | ● | ● | | | |
| Q | ● | ● | ● | ● | ● | ● | ● |

இரண்டு தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி 1500 எனின், Pக்கும் Q க்கும் உள்ள தொடர்பை ஒரு கூற்றாக தருக.

P = ........................ Q = ........................

10. 24cm, 65cm நீளமான வேலிக்கு 4 பட்டு கம்பி அடிக்க தேவையான கம்பியின் நீளம் யாது?

1 பட்டுக்கம்பியின் நீளம் =........................ 3 பட்டுக்கம்பியின் நீளம்=........................


11. 1 டசின் பென்சிலின் விலை ரூபா 48 ஆகும். ஒரு பென்சில் விலை 35 சதம் குறைந்தால் இதே காசுக்கு எத்தனை பென்சில் கூட வாங்கலாம்?

1 பென்சிலின் பழைய விலை =........................ 1 பென்சிலின் தற்போதைய விலை =........................

12. A, B, C, D எனும் எழுத்துக்களுக்கு தரப்படும் இலக்கங்களைக் கருத்திற் கொண்டு கீழ்வரும் சமன்பாட்டு வெற்றுக்கூடுகளைப் பூர்த்தி செய்க.

A = 3, B= 2, C = 4, D= 5, உதாரணம்: B+C-A=3

1. A+ B+ D = ☐ 2. D - B+ C = ☐ 3. B x A+ C = ☐

13. 



1. A, மட்டும் சரியாகும்.
2. B, மட்டும் சரியாகும்.
3. A யும் , B யும் மட்டும் சரியாகும்.
4. A யும் , B யும் மட்டும் பிழையாகும்.

14. சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. அவர்களுக்கு அவைகள் என்பது போல அவனுக்கு ........................
2. சுவைப்பது நாக்கு என்பது போல பேசுவது ........................

15. பிரசன்னா, தர்சன் எனும் இரு நண்பர்கள் தாயக்கட்டை உருட்டித் தமக்கு வந்த இலக்கங்களைப் பதிவு செய்தனர். பதிவு வருமாறு
அட்டவணையின் வெற்றுக் கூண்டைப் பூர்த்தி செய்யவும்.

| | பிரசன்னா | தர்சன் |
|---|---|---|
| முதலாவது தடவை | 5 | 3 |
| இரண்டாவது தடவை | 3 | 4 |
| மூன்றாவது தடவை | 1 | 5 |
| நான்காவது தடவை | 3 | 4 |
| ஐந்தாவது தடவை | 5 | ☐ |

16. இங்கே A, B எனும் நிகழ்வுகள் படம் மூலம் விளக்கப்படுகின்றது. அவற்றை நன்கு அவதானித்து வினாவில் உள்ள சரியான விடையின் கீழ்க் கீறிடுக.




1. A, மட்டும் சரியாகும்.
2. B, மட்டும் சரியாகும்.
3. A யும் , B யும் மட்டும் சரியாகும்.
4. A யும் , B யும் மட்டும் பிழையாகும்.

இலக்கம் 17 முதல் 21 வரையிலான வினாக்களுக்கு சரித்திர முக்கியத்துவத்துடன் தொடர்புடைய நகரின் பெயரைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.
அனுராதபுரம், பொலன்னறுவை, சிகிரியா, மன்னார், திருகோணமலை, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, தலைமன்னார், காலி.

17. விசயன் வட இந்தியாவிலிருந்து 700 தோழர்களுடன் வந்திறங்கிய நகரம். பண்டுகாபயன், தீசன், எல்லாளன், இங்கிருந்து ஆட்சி நடத்தினர். இங்கு சங்கமித்தை எனும் பிக்குணி வெள்ளரசமரத்தை நாட்டினாள். இங்கு தூபராம சமாதி, றுவன் வெலிசாய, அபயகிரி முதலிய புத்த விகாரைகள் உண்டு.

..............................................................................................................

18. சைவமும், தமிழும் சிறந்த விளங்கும் நகரம், தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகரம், பல கல்விமான்களை உருவாக்கிய நகரம். இங்கு ஆட்சி செய்த தமிழ் இராட்சிய கடைசி மன்னன் சங்கிலியன் ஆவான்.

..............................................................................................................

19. சோழ வேந்தர் காலத்தில் தலைநகராக விளங்கிய விஜயபாகு, பராக்கிரமபாகு முதலிய பல மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இங்கு பௌத்த கலாசாரமும், கட்டடக் கலைகளும், நீர்ப்பாசன முறைகளும் பேணப்பட்டன.

..............................................................................................................

20. இலங்கையின் நடுவில் மலையில் அமைந்துள்ள அழகான நகரம், புத்த பெருமானின் தந்தத்தைப் பேணிப் பாதுகாக்கும் தலதா மாளிகை உள்ள நகரம். நகரின் நடுவில் அழகிற்கு அழகூட்டும் வாவி ஒன்று உள்ளது. ஐரோப்பியர் ஆட்சியைக் கைப்பற்றும் வரை மன்னர்கள் ஆட்சி செலுத்திய நகரம்.

..............................................................................................................

21. இந்நகரைக் காசியப்ப மன்னன் நிறுவினான். இதன் உச்சியில் அரச மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. மலையின் மேற்குப் பகுதியில் உள்ள குகையினுள்ளே பல பிரபல ஓவியங்கள் உள்ளன.

..............................................................................................................

22. கீழே தரப்பட்ட பொது அறிவித்தல் தகவல்களை குறிக்கும் குறியீடுகள் காணப்படும் இடங்களை விபரிக்குக.
1. ஒலி எழுப்பக்கூடாது ........................
2. புகையிரத பயணச் சீட்டு பெறும் இடம் ........................
3. பாதை மூடப்பட்டுள்ளது. ........................
4. கடி நாய்கள் கவனம் ........................

23. ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு பொன் விழா நிறைவு 1999 ஆம் ஆண்டு கொண்டாடியதாயின் அந்நிறுவனத்தின் வெள்ளி விழா எவ்வாண்டில் கொண்டாடப்படும்?

..............................................................................................................

24. சேர் ஐசக் நியூட்டன் அப்பிள்பழம் கீழே விழுவதை அவதானித்து சிந்தித்ததால் உலகத்தவர்கள் அடைந்த நன்மை
1. புவியீர்ப்பு சக்தியை அறிந்தமை 2. பழம் பழுத்தால் விழும் என அறிந்தமை
3. அப்பிள் பழத்தை அறிந்தமை

25. 

சித்திரக் கலையிலுள்ள கீழ்வரும் வடிவம் அமைப்பதற்கு பொருத்தமான இடம்.
1. அலங்காரத்தின் விளிம்புகள்
2. அலங்காரத்தின் மத்தி
3. இடைவெளியை நிரப்ப


விசேட வினாத்தாள் I V தரம் 05 - 2012 V கல்விமுரசு

# பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்களை வழிப்படுத்துகிறது "சாந்திகம்"




(சிகரம்)

பிரச்சினைகளைக் கண்டு துவண்டு இனிமேல் எமக்கு வாழ்வே இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்ற மக்களை வழிப்படுத்துவதே 'சாந்திகம்' நிறுவனத்தின் பணி என நிறுவனத்தின் தலைவர் சிறோமி தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்;

உளவியல் என்பது மனம் சம்பந்தமான விடயம். எனவே, உளநல சிகிச்சைக்காக எம்மிடம் வருபவர்களின் பலம் மற்றும் பலவீனங்களைக் கண்டு அவர்களுடைய திறமைகளை விருத்தியடைச் செய்வதன் மூலம் உலகத்தில் எந்தவிதமான பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம். இந்த அடிப்படையிலேயே எமது நிறுவனம் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது.

24 வருடங்களாக யாழ்ப்பாண மக்களுக்குச் சேவையாற்றி வரும் இந்த நிறுவனம், 1988ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் மூலம் சமூகத்துக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். சாந்திகம் மூலம் பயன் பெற்றவர்கள் நல்ல விடயங்களை கூறுவதனூடாக பலர் எமது நிறுவனத்தைத் தேடி சிகிச்சை பெறவருகின்றனர். சாந்திகம் நிறுவனத்தின் தலைவி, உளவளச் சிகிச்சைகளுக்காக எமது நிறுவனத்தை நாடி வருபவர்களுக்கு வைத்தியர்கள் மற்றும் கிராமசேவையாளர்கள் வழிகாட்டிகளாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

யாழில் தற்போதைய கால கட்டத்தில் குடும்ப வன்முறைகள், வேலையின்மை, பாலியல் பிரச்சினை, போரால் பாதிக்கப்பட்டவர்கள், வீட்டின் சூழல் சாதாரண குடும்ப வாழ்வில் நம்பகத்தன்மையற்ற நிலை, பொருளாதாரப் பிரச்சினை, பழிவாங்குதல் போன்றன உளம் சார் பிரச்சினைகளே அதிக அளவில் காணப்படுகின்றன.

உளவளச் சிகிச்சை நிலையம் என்பது மன நோயாளிகளுக்கானது என பலரும் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறான கருத்து. ஏனெனில், மன நோயாளிகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட வைத்திய சாலைகளில் மட்டுமே சிகிச்சை அளிக்க முடியும்.

எமது நிறுவனத்தில், உடற்பயிற்சி மற்றும் தியானம் போன்ற முறைகளில் நோய் தீர்ப்பதுடன், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும், மருத்துவ பரிசோதனைகளும் நடைபெற்றுவருகிறது. யாழில் தற்போது அதிகரித்துள்ள மதுப் பாவனையே குடும்பப் பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினை என்பவற்றுக்கு காரணமாக அமைகின்றது. மதுப் பாவனையானது யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் 3ஆவது இடத்தில் உள்ளதாகவும் சாந்திகம் உளவள நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# சிகரம் ஊடக இல்லத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(சிகரம்)

சிகரம் ஊடக இல்லத்தில் ஊடகக் கல்வியைக் கற்று வெளியேறிய 2ஆம் 3ஆம் மற்றும் 4ஆம் அணி மாணவர்களின் கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை காலை10.00மணிக்கு சிகரம் ஊடக இல்லத்தில் நடைபெற்றது.

சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய 2ஆம் 3ஆம் அணி மாணவர்களிற்கு சான்றிதழ் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது


அத்துடன், மாதாந்த வெளியீடாக வந்த 'சிகரம் தொடு' இளையோர் சஞ்சிகையினை மீண்டும் பத்திரிகையாக வெளியிடுவது தொடர்பாக்க கலந்துரையாடப்பட்டதுடன், சிகரம் கல்வி வழிகாட்டி பிரிவினால் தொடர்ச்சியாகச் சமூகத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விப்பணிகள் தொடர்பாகவும், வெளிநாட்டுக்கல்வியில் விருப்பங்கொண்டுள்ள மற்றும் வேலை வாய்ப்பினை எதிர்பார்த்துள்ள மாணவருக்காக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கருத்தரங்கு, மலேசிய கல்வி வாய்ப்பு, ஆங்கில கற்கை நெறி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சிகரம் தொடு பத்திரிகை உருவாக்கத்திற்கு மாணவர்களிடைமே குழு ஒன்றும் உருவாக்கப்பட்டதுடன் இந்தக்குழுவின் தலைவராக முதலாம் அணி மாணவன் சுமதீஸ்வரனும் , உப தலைவராக இரண்டாம் அணி மாணவன் ஜெ.பாலகுமாரும், செயலாளராக இரண்டாம் அணி மாணவி ச.தரஷாவும், பொருளாளராக இரண்டாம் அணி மாணவன் நா.சாந்தரூபனும் சக மாணவர்களினால் தெரிவு செய்யப்பட்டனர்.



இந்தக் குழுவினர், பத்திரிகை உருவாக்கத்திற்குத் தேவையான செய்தி சேகரிப்பு, விளம்பரங்கள், பத்திரிகையைச் சந்தைப் படுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதாக உறுதியளித்ததுடன், இந்தக் குழுவினர் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன், தமக்கு வழங்கிய பணிகளை செய்வதாகவும் தெரிவித்தனர்.

# வெங்காயத்தின் விலை திடீரென அதிகரிப்பு



(சிகரம்)

திருநெல்வேலிச் சந்தையில் கடந்த சில நாட்களாக வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப்படுவதாக இந்தச் சந்தையில் வெங்காய விற்பனையில் ஈடுபட்டுவரும் விற்பனையாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வெங்காயம் நடுகைக் காலம் ஆரம்பித்துள்ளதால் விற்பனை செய்யும் வெங்காயத்தின் விலை அதிகரித்துக் காணப்படுவதாகவும், எல்லாப் பிரதேசங்களிலும் வெங்காயம் நடுகைக்காக பயன்படுத்தபட்டுவிட்டதனால் சந்தைக்கு தரம் பிரிக்கப்பட்ட வெங்காயமே விற்பனைக்கு வருவதாகவும் அந்த வியாபாரி குறிப்பிட்டார்


தற்போது திருநெல்வேலிச் சந்தையிலே 1கிலோ சின்ன வெங்காயம் 100ரூபாவாகவும், பெரிய வெங்காயம் 130 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அண்மைக்காலமாக மரக்கறிகளின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திற்கு தற்போது தம்புள்ளையிலிருந்து வரும் வெங்காயத்தை விட யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் சுவை கூடியதாக உள்ளதனால் விலை கூடுதலாக இருந்தாலும் யாழ்ப்பாண வெங்காயத்தினை தமது தேவைக்கேற்றஅளவுகளில் மக்கள் கொள்வனவு செய்வதாக நுகர்வோர் ஒருவர் தெரிவித்தார்.

# மெய்தான் பாருங்கோ...

## இறந்தவர் யாரோ? இருப்பவர் எவரோ?



**கனநாளைக்குப்** பிறகு கிளிநொச்சியில தெரிஞ்ச ஒரு பொடியனைச் சந்திச்சனான் பாருங்கோ. வன்னிப்போர் முடிஞ்சு இப்ப மூண்டு வருசத்துக்குப் பிறகு எதிர்பாராத விதமாக ஒவ்வொருவரையும் சந்திக்கேக்கைதான் போருக்குள்ளை தப்பினவை ஆர்...? செத்தவை ஆர்... எண்டதெல்லாம் தெரிய வருகுது கண்டியளே!

ஆனாலும் பாருங்கோ! கால ஓட்டத்தில இன்னும் எவ்வளவோ தெரியாத சங்கதியளும் அப்படியே ஓடி மறைஞ்சு போயிடும். அதாவது நான் என்ன சொல்ல வாறன் எண்டால், எங்களோடை வன்னியில இருந்தவை ; பழகினவையெல்லாரும் இடப்பெயர்வில சிதறுப்பட்டு ஆளுக்கொரு பக்கமாப்போய், அங்கால வவுனியாவில இடத்துக்கிடம் இடம் பெயர்ந்ததோர் முகாமில இருந்து, பிறகு மீள் குடியேற்றமெண்டு அவையவை தங்கட ஊருக்குப் போயிட்டினம் பாருங்கோ!

இப்பிடி ஊருக்குப் போன ஆட்களில எங்களுக்குத் தெரிஞ்ச ஆட்கள் எத்தனைபேர் இப்ப உயிரோடை இருப்பினம் எண்டது இதுவரையிலும் தெரியாது. ஒரு கடிதத் தொடர்போ? போன் வசதியோ இதுவரையிலும் கிடையாது.

இப்படியான நிலையில, சிலபேரை நாங்கள் சண்டையில செத்துப்போச்சினமாக்கும்... எண்டுதான் நினைக்கவேண்டிக் கிடக்குது. அப்பிடி நினைச்சுக்கொண்டிருந்த ஆட்களில ஒருத்தன் தான் நான் இப்ப சொன்ன அந்தக் கிளிநொச்சிப் பொடியன்.

ஆமிக்காரர் மன்னாரில இருந்து வெளிக்கிட்டுவர, அவனும் தன்ர மனிசி, இரண்டு வயசுக்குழந்தை, மாமி, மச்சாள்... எண்டு குடும்பமாக வெளிக்கிட்டு தருமபுரம், உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு கடைசியாக மாத்தளன் - கப்பல் றோட்டில என்ர வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளி தரப்பாள் அடிச்சு இருந்தவன் பாருங்கோ!

ஒருநாள் இரவு ஷெல்லடி அமளிக்குப்பிறகு... விடிஞ்சாப் போல இந்தப் பொடியன்ர தரப்பாள் வீடு வெறுமையாக் கிடந்ததைக் கண்டு நான் ஏங்கிப்போனன். வீட்டில ஷெல்லும் விழுந்தமாதிரியில்லை. அப்ப பயத்தில குடும்பத்தோடை வேற எங்கையோ எட்டப்போயிட்டானாக்கும்... எண்டு நினைச்சிட்டுப் பேசாமல் இருந்திட்டன்.

பிறகு ஆமி மாத்தளன் சந்திக்கு வர, அவனவன் தங்கட உயிரைப் பாத்தாங்களே ஒழிய, அறிஞ்சவன் ; தெரிஞ்சவன்; பழகினவன்; பக்கத்தில படுத்துக்கிடந்தவன்... எண்டு ஆரேனும் பாத்தவையே... எல்லாரும் கால்போன போக்கில கடற்கரை வழிய ஓடினதுதான் கண்டியளே!

அப்பிடி ஓடி... ஓடி... ஓஞ்சு போய் இப்பதான் அவனைச் சந்திக்கிறன் நான். இவ்வளவு காலமும் அவன்ர சிலமனைக் காணாததால அவனும் எங்கையாவது செத்துக் கித்துப் போனானாக்கும் எண்டுதான் நான் நினைச்சன். அண்டைக்கு ஷெல் அடி அமளியா நடந்தாப் பிறகு தன்னுடைய வீட்டில என்ன நடந்ததெண்டு அவன் சொன்னான் பாருங்கோ!

சின்னச்சாமியண்ணை! ஆமிக்காரன் ஷெல் அடிச்சு ஓய்ஞ்சாப்பிறகு என்ர சின்னன் (குழந்தை) பசிக்குதெண்டு அழுதான். மனிசி ஏற்கனவே ரொட்டி சுட்டு வைச்சிருந்தவள். அதில ஒண்டை எடுத்து பாதியைப் பிச்சுக்குடுக்க, பிள்ளை அது தனக்கு வேண்டாமெண்டு, பாண்தான் வேணுமெண்டு அழுதான். அந்த நேரம் அந்த இடத்தில பாணுக்கு நான் எங்கை போறது?

உடன அந்த நேரமே நான் தீர்மானிச்சிட்டன். ஆமியிட்டை போகேக்கை ஆராவது சுட்டால் சுடட்டும். பெத்தபிள்ளை என்ர முகத்தைப்பாத்து, தான் விரும்பின சாப்பாட்டுக்கு அழுகுது. அதை வாங்கிக் குடுக்கிறதுக்கு எனக்கு வழியில்லையெண்டால், பிறகு அந்தப்பிள்ளைக்கு அப்பனா இருக்கிறதில என்ன தகுதி கிடக்குது... எண்டு நினைச்சன். உடன பிள்ளையைத் தூக்கித்தோளில போட்டுக்கொண்டு, மனிசியைக் கேட்டன் நீவாறியா... எண்டு. அவள் பயத்தில நிற்க, நான் பிள்ளையோட விறுவிறுஎண்டு இரணைப்பாலை றோட்டுப்பக்கம் ஆமியிட்டை போற சனத்தோடை சேந்திட்டன். பிறகு மாமி, மனிசி, மச்சாள் என எனக்குப் பின்னால வந்திட்டினம்.

தடையை உடைச்சு ஆமியின்ர கட்டுப்பாட்டுக்கை நுழையிற நேரம் பின்னால வெடிச்சத்தங்கள் கேட்டுது. ஆர்... எவை... அந்த இடத்தில செத்துவிழுந்திச்சினம் எண்டது தெரியா தண்ணை... எண்டு அவன் சொல்லிக்கொண்டு போக, எனக்கு என்ர கண்ணால கண்ணீர் ஊத்துப்பட்டுக் கொண்ருந்துது பாருங்கோ.

ஏனெண்டு கேட்கிறியளே! போரின் அவலம் எனக்கு மட்டுமில்லை. எல்லாருக்கும்தான். உயிர்தப்புற ஆசையில இதுவரை ஆர்...எவை...உயிரை விட்டிருக்கினம்... எண்டது ஒருவருக்கும் தெரியாது. இனி உயிரோடை நேருக்கு நேரை அவையளைப் பாத்து சந்தோஷப்பட்டால் ஒழிய, இல்லையெண்டால் செத்துப்போச்சினம்... எண்டு நினைச்சு மனசுக்குள்ள அழுது குளறிப்போட்டு இருக்க வேண்டியதுதான்.

\- **சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# ஆந்திராவில் சுட்டெரிக்கும் வெய்யில்; ஒரே நாளில் 148 பேர் பலி



(சித்தூர்)

ஆந்திர மாநிலம் முழுவதும் ஒரே நாளில் வெயில் கொடுமைக்கு 148 பேர் பலியாகி உள்ளனர். வெயிலின் உச்சமாக கருதப்படும் அக்னி நட்சத்திரம் கடந்த மாதம் 4ஆம் திகதி தொடங்கி 28ஆம் திகதி முடிவடைந்தது. அக்னி நட்சத்திரம் முடிந்தால் படிப்படியாக வெயிலின் தாக்கம் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து சுட்டெரித்து வருகிறது. ஆந்திர மாநிலத்தில் கோடை வெயிலால் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் அதிகபட்சமாக 110 பாகை வெயில் சுட்டெரித்தது. இதில் காக்கிநாடா, துணி ஆகிய மண்டலங்களில் 36 பேர் பலியாகினர் விசாகபட்டினத் தில் 108 பாகை கொளுத்திய வெயிலில் 31 பேரும், மேற்கு கோதாவரி மாவட்டத்தில் 108 பாகை வெயிலுக்கு 21 பேரும், கம்மம் மாவட்டத்தில் 106 பாகைக்கு 13 பேரும், கிருஷ்ணா மாவட்டத்தில் 11 பேரும், வாரங்கல் 11 பேரும், விஜயநகரத்தில் 9 பேரும், ஸ்ரீகாகுளம், கரீம்நகர் மாவட்டங்களில் தலா 6 பேரும், குண்டூர் மாவட்டத்தில் 6 பேரும், சித்தூர் மாவட்டத்தில் 2 பேர் உட்பட மாநிலம் முழுவதும் 148 பேர் பலியாகி உள்ளனர். அந்தந்த மாவட்ட தலைநகரங்கள் வெளியிட்டுள்ள தகவல்படி இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

# ஆளும் கட்சி வேட்பாளரை தெரிவுசெய்யும் உரிமை சோனியாவுக்கு

இந்தியாவின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஆளும் கட்சியின் வேட்பாளரை தெரிவுசெய்வதற்கான இறுதி தீர்மானத்தை எடுக்கும் உரிமை கட்சியின் தலைவர் சோனியா காந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை காங்கிரஸ் கட்சியின் மத்திய செயற்குழு சோனியா காந்திக்கு வழங்கியுள்ளது.

நீண்ட நேரம் நடைபெற்ற கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


நிதியமைச்சர் பிரனாப் முகர்ஜி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் போட்டிக்கான வேட்பாளர் பட்டியலில் உள்ளனர்.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி பிரதீபா பட்டீலின் பதவிக் காலம் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நடிகர்கள் கட்சி நடத்த முடியாது



வடலூர் பஸ் நிலையத்தில் ம.தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றிய செயலாளர் விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ம.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் நாஞ்சில் சம்பத், மாநில நிர்வாகிகள் செந்திலதிபன், வந்தியதேவன், நெய்வேலி பிச்சை, மாவட்ட செயலாளர் ராமலிங்கம், பொறியாளர் அணி மாவட்ட செயலாளர் சிவக்குமார், வடலூர் செயலாளர் தண்டபாணி, முன்னாள் பொருளாளர் விஜயராகவன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் பேசியதாவது:-

ம.தி.மு.க. தொடங்கி 18 ஆண்டு நிறைவு பெற்று விட்டது. ஆனால் தொண்டர்கள் சோர்வு இன்றி உற்சாகமாக இருக்கிறார்கள். ம.தி.மு.க. தொண்டர்கள் குடும்பத்தின் ஒரு அங்கமாகவே இயக்கத்தை போற்றுகிறார்கள்.

தமிழ்நாட்டில் கட்சியில் இருந்து விலக்கப்பட்டவர்கள் கட்சியை நடத்த முடியாது. அவ்வளவு சிரமம் இருக்கிறது. நடிகர்கள் கட்சி நடத்த முடியாது. சிவாஜியைவிட சிறந்த நடிகர் யாரும் இல்லை. அவரே கட்சி ஆரம்பித்து நடத்தி பார்த்து விட்டு விட்டார்.

இதேபோன்று மூப்பனார்கூட கட்சியை தொடங்கி எதிர்க்கட்சி தலைவர் என்ற நிலையில் த.மா.க. கட்சி நிற்க முடியவில்லை. கட்சி நடத்துவது சுலபமானது இல்லை. எங்களிடம் (ம.தி.மு.க.) பணம் இல்லை,

# பிரதமர் வேட்பாளராக மோடியை நிறுத்தலாம்

(புதுடில்லி)

ஆர்.எஸ்.எஸ். சார்பில் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் பத்திரிகை வெளியிடப்படுகிறது. இரண்டு தினங்களுக்கு முன்பு இந்தி மொழி பத்திரிகையில், குஜராத் முதல்-மந்திரி நரேந்திரமோடியை விமர்சித்து கட்டுரை வெளியானது.

அதில், நரேந்திரமோடி செயற்படும் முறையும், கட்சி நிர்வாகிகளை நடத்தும் விதமும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. எனவே, மோடி தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும். பாரதீய ஜனதாவில் பிரதமர் பதவிக்கு தகுதியானவர்கள் பலர் உள்ளனர் என்று அந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டு இருந்தது.


ஆனால், ஆர்.எஸ்.எஸ். பத்திரிகையின் ஆங்கில பதிப்பான 'ஆர்கனைசர்' நரேந்திரமோடியை புகழ்ந்து கட்டுரை வெளியிட்டு இருக்கிறது. அதில் கூறியிருப்பதாவது:-

பாரதீய ஜனதாவில் தற்போது மக்களால் பரவலாக அறியப்படும், மரியாதைக்குரிய நபராக குஜராத் முதல் மந்திரி நரேந்திரமோடி உள்ளார். இன்னும் இரண்டு ஆண்டில் பொதுத்தேர்தல் நடக்க உள்ளது. நாட்டில் பிரபலமான தலைவராக உருவெடுத்துள்ள நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக பாரதீய ஜனதா அறிவிக்கவேண்டும்.

கடந்த 1990இல் வாஜ்பாய் எப்படி பாரதீய ஜனதாவுக்கு வாக்குகளை பெற்றுத் தந்தாரோ, அதேபோல, நரேந்திரமோடியாலும் செய்ய முடியும். வாஜ்பாய் அளவுக்கு மோடி மிகவும் சக்தி



வாய்ந்தவர். குஜராத்தில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி காட்டியவர் நரேந்திரமோடி. அவரை நன்கு பயன்படுத்திக் கொண்டால், உத்தரபிரதேசம், ஒரிசா, அரியானா மற்றும் பல மாநிலங்களில் பாரதீய ஜனதாவுக்கு அதிக இடங்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். காங்கிரஸ் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சமயத்தில், நரேந்திர மோடியை பயன்படுத்தி நாடு முழுவதும் பிரசாரம் செய்ய வேண்டும். போலி மதசார் பின்மை பேசுபவர்களின் விமர்சனங்களை ஒதுக்கி தள்ளவேண்டும். அப்படி செய்தால், தேசிய ஜனநாயக கூட்டணி, மீண்டும் மத்தியில் ஆட்சியை பிடிப்பது உறுதி என்று அதில் கூறப்பட்டுள்ளது.




# அரசுக்கு எதிராக சில சக்திகள் சதி செயற்குழு கூட்டத்தில் சோனியா ஆவேசம்

(புதுடில்லி)

காங்கிரசுக்கு எதிரான சில சக்திகளும், எதிர்க் கட்சிகளும் இணைந்து, மத்திய அரசு மீதும், பிரதமர் மீதும், அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றன. இது, நமக்கு சோதனைக் காலம். இந்த சதியை முறியடிக்க வேண்டுமெனில், கோஷ்டி மோதலை கைவிட்டு, கட்சியினர் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என, காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில், கட்சித் தலைவர் சோனியா பேசினார்.

பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், காங்கிரஸ் கட்சிக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், அக்கட்சியின் செயற்குழு கூட்டம், நேற்று டில்லியில் நடந்தது. இதில், பிரதமர் மன்மோகன் சிங், கட்சித் தலைவர் சோனியா, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

இதில், கட்சித் தலைவர் சோனியா, துவக்க உரையின் போது பேசியதாவது; மத்திய அரசின் மீதும், பிரதமர் மீதும், காங்கிரசுக்கு எதிரான




சக்திகளும், எதிர்க் கட்சிகளும் இணைந்து, அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றன. ஜனநாயக அமைப்பில், ஆளும் கட்சிக்கு எதிராக செயற்படுவது தான் எதிர்க் கட்சிகளின் பணி. ஆனால், சில சக்திகளும், இங்குள்ள எதிர்க் கட்சிகளும் செயற்படும் முறையை பார்த்தால், அரசுக்கு எதிராக, இவர்கள் சதி செய்வது போல் உள்ளது.நம் மீதான இந்த குற்றச்சாட்டுகளை முறியடிக்க, தீவிரமாக செயல்பட வேண்டும். தற்போது, சர்வதேச அளவில், பொருளாதார நெருக்கடி உள்ளது. இது, சாதாரண மக்களை பாதிக்கிறது. நம் நாடும், இந்த நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்றார்.

# பீகாரில் 19 குழந்தைகள் மர்மக் காய்ச்சலுக்குப் பலி

பீகாரில் பரவி வருகின்ற் மர்மக் காய்ச்சலுக்கு இதுவரை 19 குழந்தைகள் பலியாகியுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீகாரில் பல மாவட்டங்களில் ஒரு விதமான வி'க் காய்ச்சல் பரவி வருகின்றது. இங்குள்ள கயா நகரில் இந்தக் காய்ச்சல் தாக்கிய குழந்தைகளில் 8 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். மேலும் 6 குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முசாபர்பூர் மாவட்டத்தில் மட்டும் மர்மக் காய்ச்சலுக்கு 10 குழந்தைகள் பலியாகி விட்டனர். மேலும் 10 குழந்தைகள் பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தவிர முசாபர்பூர் அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு குழந்தையும் இறந்துள்ளது.

கயா, முசாபர்பூர் மாவட்டங்களில் கடந்த வருடமும் இதே போன்று பரவிய மர்ம காய்ச்சலால் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எந்தத் தியாகத்திற்கும் தயார்



(புதுடில்லி)

நாட்டில் ஊழலை ஒழிக்க எந்த தியாகத்திற்கும் தான் தயாராக இருப்பதாக சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே தெரிவித்துள்ளார்.

அவரி மேலும் தெரிவிக்கையில் நான் திருமணம் செய்து கொள்ளவில்லை. எனினும் நாடு தான் எனது குடும்பம், நாட்டில் ஊழலை ஒழிப்பதற்காக எதையும் தியாகம் செய்யத் தயார். மகாராஷ்டிராவில் ஊழலுக்கு எதிராக நான் மேற்கொண்ட போராட்டத்தின் காரணமாக இதுவரை 6 அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர். நாட்டின் நலனுக்காக நான் எனையே தியாகம் செய்ய தயாராக உள்ளேன். மேலும் ஊழலுக்கு எதிரான பிரசாரத்தினால் 400 அதிகாரிகள் பதவி இழந்துள்ளனர். மக்கள் அதிகாரம் படைத்தவர்கள். அரசியல்வாதிகளை கேள்வி கேட்பதற்கும், கொள்கையில் விளக்கம் கேட்கவும் மக்களுக்கு முழு உரிமை உண்டு என்றார்.

# சிரியாவில் தொடரும் தாக்குதல்; 80 இராணுவத்தினர் உயிரிழப்பு



சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் நடாத்திய தாக்குதல்களில் 80 க்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளர்ச்சியாளர்களுக்கு சார்பான இணையதளங்கள் குறிப்பிடுகின்றன.


டமாஸ்கஸ் மற்றும் இட்லிப் உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள காவலரண்களே தாக்கப்பட்டுள்ளன.

படையினருக்கு இதன்போது பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் தொடரும் நிலையில், கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன.

இதேவேளை சிரியாவில் தொடரும் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ரஷ்யா இணைந்து செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சுற்றுலா சென்றவருக்கு விசித்திரமான சிறை?



ஜேர்மனியை சேர்ந்த அலெக்சாண்டன் டோனின்கெர்(வயது 42) என்பவர் விடுமுறையை சந்தோஷமாக கழிப்பதற்காக மனைவி 2 குழந்தைகளுடன் ஆஸ்திரியா சென்றுள்ளார்.

அங்கு குளிர்பதனப் பெட்டியில் வைத்த(உயிர் இல்லாத) 2 மீன்களை வாங்கி அதனை சுற்றுலா செல்லும் இடத்திற்கு கொண்டு சென்று சமைத்து சாப்பிட திட்டமிட்டார்.

அதன்படி ஒரு ஏரிக்கரைக்கு சென்று இவர்கள் மீன்களை கம்பியில் குத்தி தண்ணீரில் சுத்தம் செய்தார். ஆனால் அங்கு மீன் பிடிப்பது சட்டவிரோத செயலாகும்.

இதை பார்த்த நபர் ஒருவர் மீன் பிடிப்பதாக நினைத்து பொலிஸுக்கு தக்வல் கொடுத்துள்ளார். உடனே பொலிஸார் வந்து மீன்களை கைப்பற்றி அலெக்சாண்டரையும் கைது செய்தனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், அது உயிரற்ற மீன் என்பதோ அல்லது பிடிக்கப்பட்ட மீன் என்பதோ கேள்வி கிடையாது. அந்த தண்ணீர் கரைக்கு மீன்களை கொண்டு வந்தது சட்டவிரோத செயல் எனத் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி அலெக்சாண்டரின் சட்டத்தரணி கூறுகையில், இது ஒரு முட்டாள் தனமான வழக்கு என்றார். இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சுற்றுலா சென்ற அலெக்சாண்டருக்கு 6 மாதம் சிறைத் தண்டனை கிடைக்கும் என்றார்.

# ஜன்னலை சுத்தம் செய்ய பணிப்பெண்களுக்கு தடை


சிங்கப்பூரில் பணிப் பெண்கள் ஜன்னல் சுத்தம் செய்யும் பணிகளை செய்ய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

சிங்கப்பூரில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த இரண்டு இலட்சம் பெண்கள் வீட்டு வேலை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பல அடுக்கு கொண்ட குடியிருப்புகளில் வேலை செய்யும் பணிப் பெண்கள் பல்கனியில் துணி காயவைக்கும் போதும், ஜன்னல்களை சுத்தம் செய்யும் போதும் தவறி கீழே விழுந்து விடுகின்றனர்.

இந்த ஆண்டில் மட்டும் ஒன்பது பெண்கள் இதுபோன்று கீழே விழுந்துள்ளனர். இவர்களில் ஏழு பேர் இறந்து விட்டனர். நேற்று முன்தினம் இந்தோனேசியாவை சேர்ந்த 29 வயது பணிப் பெண் ஜன்னலை சுத்தம் செய்யும் போது, 12ஆவது மாடியில் இருந்து கீழே விழுந்த போது கீழ் மாடியில் இருந்தவர்கள் அவரைக் காப்பாற்றியுள்ளார். அடிக்கடி இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதால், ஜன்னலை சுத்தம் செய்யும் பணியில் உரிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு இல்லாமல் பணிப் பெண்கள் இந்த வேலையை செய்யக்கூடாது என சிங்கப்பூர் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# போலியான மென்பொருட்களால் ஆண்டுக்கு பலகோடி இழப்பு




உலகம் முழுவதும் திருட்டு மென்பொருட்களை பயன்படுத்துவதால், உண்மையான மென்பொருள் துறைக்கு ஆண்டுக்கு ரூ.3.48 இலட்சம் கோடி இழப்பு ஏற்படுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பாக லண்டனை சேர்ந்த பிசினஸ் சாப்ட்வேர் அலையன்ஸ்(பிஎஸ்ஏ) என்ற நிறுவனம் உலகம் முழுவதும் விரிவான ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் பயன்படுததப்படும் கணினி மென்பொருட்களில் பாதிக்கு மேல் போலியானவை. இது 2010ஆம் ஆண்டில் இருந்ததில் இருந்து 2011 ஆம் ஆண்டில் 17 சதவீதம் அதிகரித்துள்ளது.

போலியான மென்பொருட்களைப் பயன்படுத்துவது பற்றி 33 நாடுகளை சேர்ந்த 15,000 பேரிடம் முதல் முறையாக தகவல் பெறபட்டது. உரிமம் பெறாத அல்லது திருட்டு மென்பொருட்களை எவ்வளவு முறை வாங்கி பயன்படுத்துகிறீர்கள் என்ற கேள்விக்கு 'எப்போதுமே' என்று 5 சதவீதத்தினர் பதிலளித்தனர்.

பெரும்பாலான நேரங்களில் போலி அல்லது திருட்டு மென்பொருட்களையே பயன்படுத்துகின்றோம் என 9 சதவீதத்தினர் கூறினர். 17 சதவீதம் பேர் தாங்கள் பயன்படுத்தும் கணினி மென்பொருட்களில் ஏறக்குறைய பாதி போலி அல்லது திருட்டு மென்பொருள் என்றனர்.

மொத்தத்தில் 43 சதவீதம் பேர் மட்டுமே போலியான மென்பொருட்களை பயன்படுத்தியதே இல்லை என்று தெரிவித்தனர். இதன் மூலம் உலகம் முழுவதும் சுமார் 57 சதவீதத்தினர் திருட்டு மற்றும் போலி மென்பொருட்களை பயன்படுத்துவது தெரிய வந்தது.

இதனால் ஒரிஜினல் மென்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் ஆண்டுக்கு ரூ.3.48 இலட்சம கோடி நஷ்டத்தை சந்திக்கின்றன. 2010ஆம் ஆண்டில் இது ரூ.3.23 இலட்சம் கோடியாக இருந்தது. ஒரே ஆண்டில் 17 சதவீத இழப்பு அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாலியல் ரீதியான தாக்குதலுக்கு எதிராக பெண்கள் போராட்டம்

பெண்கள் பாலியல் ரீதியாக தாக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொலம்பியாவில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்யும் ரோஸா எல்விரா செலி என்ற பெண், கடந்த 24ஆம் திகதி பாலியல் ரீதியாக தாக்கப்பட்டது கொலம்பியாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கான பெண்கள் தலைநகர் பொகோட்டாவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த குற்றத்தை செய்யும் நபர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி கேட்டுக் கொண்டனர்.

கடந்தாண்டு மட்டும் கொலம்பியாவில் 51,000 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# நைஜீரியா விமான விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 193



நைஜீரியாவில் பயணிகள் விமானம் விபத்தில் பலியானோர் தொகை 193 ஆக அதிகரித்துள்ளது.

இந்த விமானம் லாகோசிலிருந்து புறப்பட்டு சென்ற சிறிது நேரத்திலேயே, குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொறுங்கியதில் விமானத்தில் இருந்த 153 பேரும் பலியாகினர்.

இதே போன்று குடியிருப்பு பகுதியில் விழுந்ததால் அந்த பகுதியை சேர்ந்த பலர் உயிரிழந்தனர். இதுவரை அந்த பகுதியை சேர்ந்த 40 பேர் பலியாகி இருப்பது உறுதியாகி உள்ளது.

இன்னும் பலர் பலியாகி இருக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது. விபத்துக்குள்ளான விமானத்தை ஓட்டிய விமானி அமெரிக்காவை சேர்ந்தவர் ஆவார். இணை விமானி இந்தியாவை சேர்ந்த மகேந்திர சிங் ரத்தோர்என்பவராவார் இவர்களும் பலியாகி விட்டனர்.

இந்த விமான விபத்தால் நைஜீரியா சோகத்தில் மூழ்கி உள்ளது. நைஜீரியா ஜனாதிபதி குட்லக் ஜோனத்தான், 3 நாள் தேசிய துக்கமாக அறிவித்துள்ளார்.

விமான விபத்து குறித்து விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டு விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# இரட்டை குடியுரிமையால் நாடாளுமன்ற உறுப்புரிமை இடைநிறுத்தம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் உள்விவகார அமைச்சர் ரஹ்மான் மாலிக்கின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இடைநிறுத்துமாறு அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவரின் குடியுரிமை தொடர்பில் எழுந்த சர்ச்சைகளை அடுத்து பாகிஸ்தானின் உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இவர் ஏற்கனவே பிரித்தானியாவின் குடியுரிமை பெற்றுள்ளதாகவும் அதனை இரத்துச் செய்தமை தொடர்பிலான ஆவணங்கள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மிக விரைவில் நீதிமன்றத்துக்கு தெளிவுபடுத்துமாறு கூறப்பட்டுள்ளது.

இதனிடையே அவரது உள்விவகார அமைச்சுப் பொறுப்புக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# ராடிகிருஷ்ணன் சிறுவர்க்குச் சொன்ன கதை

**ஒரு காட்டில்** ஒரு யானைக் குட்டி இருந்தது. அதுக்குத் தான் பெரிய ஆளென்று நினைப்பு, தினமும் காட்டில் நடந்துகொண்டே தும்பிக்கைக்கு எட்டுகிற மரக்கிளைகளை ஒடிச்சு சாப்பிட்டுக்கொண்டு போகும். அப்படி ஒரு நாள் ஒரு மரத்தை நெருங்கின போது, அங்கே இருந்த சிட்டுக்குருவி கையை ஆட்டி, 'ஹாய் யானை நண்பா' என்று சொல்லியது.

அதைக் கேட்ட யானைக்குட்டி அலட்சியமாகச் சொன்னது: 'உன்னுடைய சைஸ் என்ன? என்னுடைய சைஸ் என்ன? நாம் எப்படி நண்பர்களாக இருக்க முடியும்?'

உடனே குருவி பதில் சொன்னது.

'ஏன் முடியாது. நட்புக்கு உருவம் முக்கியம் இல்லை. மனசு தான் முக்கியம். நான் இந்த மரத்தில் நீண்ட காலமாக இருக்கிறேன். நீ இதை ஒடிச்சால், நானும் இங்கே இருக்கிற மற்ற பறவைகளும் எங்கே போவது? என்று கேட்டது.

அதுக்கு யானை கேலியான குரலில் சொன்னது,


'இந்த மரம் உங்களுக்கு வேண்டுமானால் வீடாக இருக்கலாம் ஆனால் எனக்கு இது தான் சாப்பாடு' என்றது.

அதைக்கேட்ட குருவி சொன்னது,

'அப்படியென்றால் நமக்குள்ளே ஒரு போட்டி வைச்சுக் கொள்ளலாம். அதில் நீ ஜெயிச்சால், இந்த மரத்தின் கிளைகளை ஒடிச்சுச் சாப்பிட்டுக்கொள். நான் ஜெயிச்சிட்டால் மரத்தை ஒடிக்கக்கூடாது' என்றது சிட்டுக்குருவி.

'பொடிப் பயல் உன்னோடு போட்டியா? சரி சொல்லு' என்றது யானைக குட்டி.

'நாம் இரண்டு பேரும் அந்த மலை வரைக்கும் பறக்க வேண்டும். யார் முதலில் அங்கே போய்ச் சேர்கிறோமோ, அவர்தான் வெற்றியாளர்' என்றது சிட்டுக்குருவி.



யானை தன்னாலே பறக்க முடியாது என்று தெரிந்த போதும் வீம்புக்காக 'இவ்வளவு தானா பறந்திட்டால் போகுது' என்று போட்டிக்கு ஒத்துக் கொண்டது.

போட்டி ஞாயிற்றுகிழமை காலை நடைபெறும் என்று நாள் முடிவு செயயப்பட்டது. இப்போ யானைக்கு ஒரு பிரச்சினை. நாலு நாளைக் குள்ளே எப்படியாவது பறக்க கற்றுக் கொள்ள வேண்டும், என்ன செய்வது, யாரிடம் கற்றுக் கொள்வது எனக் குழம்பியது.

பறக்கிறது என்பது பெரிய விஷயமா என்ன, முயன்றால் கற்றுக் கொண்டு விடலாம் என்று நினைத்தபடி சென்ற யானை வழியிலே ஒரு கோழியை பார்த்தது.

'கோழி கோழி, எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும், நான் எப்படியாவது பறக்க வேண்டும். அதுக்கு ஒரு வழி சொல்' என்றது.

அதைக் கேட்ட கோழி சொன்னது 'அது மிகச் சுலபம் அண்ணே. நான் என்ன செய்கிறேன் என்று நன்றாகக் கவனி! அதே மாதிரி செய்தாய் என்றால் நீயும் பறக்கலாம்' என்றது.

யானையும் ஒத்துக் கொண்டது.





கோழி அங்கே இருந்த ஒரு பாறை மேலே ஏறி நின்றுகொண்டு சடசட வென்று இறக்கை அடித்தபடியே தாவியது. சில நொடிகள் அந்தரத்தில் பறந்தவாறு கீழே வந்து சேர்ந்தது.

'இவ்வளவு தான், ஈஸி, எங்கே நீ பற பார்க்கலாம்' என்றது.

யானையும் கஷ்டப்பட்டுப் பாறை மீது ஏறி நின்று கோழி மாதிரி கால்களை விரித்துக்கொண்டு தாவியது. அவ்வளவுதான், தொபுக்கடீர் என்று கீழே விழுந்து நல்ல அடி, தொப்பை கலங்கிப் போனது.

'யம்மா, யப்பாடியோவ்' என்று கத்திக்கொண்டே 'டேய் பறக்கிறதுக்கு வழி கேட்டால் இடுப்பை முறிக்கிற துக்கா வழி சொல்கிறாய்' என்று சொல்லி எழுந்து நின்றது.

எங்கே யானை தன்னை அடித்து விடுமோ என்று பயந்து போன கோழி ஒரே ஓட்டமாக ஓடியது.

யானை மிகுந்த வலியோடு 'சே, அவசரப்பட்டுப் போட்டிக்கு ஒப்புக் கொண்டு விட்டோமோ?, 'ம்...' சிட்டுக் குருவியிடம் தோற்பதா கூடாது. எப்படியும் வென்றுவிட வேண்டும்' என்று நினைத்து தள்ளாடி நடந்தது.

அந்தப் பக்கமாக ஒரு காகம் பறந்து வந்தது. அதை நிறுத்திய யானை, விஷயத்தைச் சொல்லியது. யானையை மேலே இருந்து கீழே வரைக்கும் பார்த்த காகம், 'உன்னுடைய பாரம்தான் அண்ணே பிரச்சினையே. நாலு நாள் சாப்பிடாமல் கிடந்தால் நல்லாப் பறக்கலாம்' என்று சொல்லிவிட்டுப் பறந்து போயிற்று.

யானை எதுவும் சாப்பிடாமல் பட்டினிகிடந்து நாலு நாட்களில் வாடி வதங்கிப் போனது. எழுந்து நிற்கவே முடியவில்லை. சரி எப்படியாவது பறந்து பார்க்கலாம் என்று மெல்லத் தாவிப் பார்த்தது. கண்ணை இருட்டி மயக்கம் வந்து கீழே விழுந்தது.

காகம் அதன் பக்கத்தில் வந்து அமர்ந்து 'இதுக்கே உன்னாலே தாங்க முடியவில்லையா, அப்போ நீ பறந்த மாதிரித்தான்' என்று கேலி செய்தது.

அதைக்கேட்ட யானை கோபத்தில அடிக்க தும்பிக்கையை சுழற்றியதும் காகம் தப்பிப் பறந்து கொண்டே, 'உன்னாலே என்னை ஒன்றும் செய்ய முடியாது. எனக்கு இறக்கை இருக்கு, உனக்கு இறக்கை இல்லையே' என்று சிரித்தபடியே சொல்லியது.

யானைக்கு கோபம் அதிகமாகி கத்தியது.

அதைக்கேட்ட கழுகு இவர்களுக்கு அருகே பறந்து வந்து சொன்னது.

'ஏன் அண்ணே கோபப்படுகிறாய், பறக்கிறது சாதாரண விஷயம் தான். அதுக்கு நீ என்ன செய்ய வேண்டுமென்றால், அதோ தெரியுதே உயரமான மலை, அதில் மேலே ஏறு. உச்சிக்குப் போனதும், அங்கே இருந்து நான் பறக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே கண்ணை மூடிக்கொண்டு குதி. தானாகவே பறக்க ஆரம்பித்து விடுவாய்' என்றது.

யானைக்கு அப்படிக் குதித்தால் பறக்கமுடியுமா என்று தயக்கமாக இருந்தது. கழுகு, 'என்னை நம்பினால், உடனே நீ பறந்து விடலாம்' என்றது.

யானை மூச்சுவாங்க மலை மேல் ஏற ஆரம்பித்தது. உச்சிக்குப் போவதற்கு முன்னரே மூச்சு வாங்கியது. அங்கேயிருந்து கீழே பார்த்தால் அவ்வளவு பெரிய காடு மரம் எல்லாம் குட்டிக் குட்டியாகத் தெரிந்தது, கண்ணை மூடிக்கொண்டு கீழே குதிகலாம் என்று எட்டிப் பார்த்தால் தலை சுற்றியது. வேறு வழியில்லை என்று குதிக்கப் போகும் போது குருவி பறந்து வந்து சொன்னது,

'யானை அண்ணே, இங்கே இருந்து குதிச்சால் அவ்வளவுதான் நீங்கள் காலி. இவ்வளவு உயரத்திலே இருந்து பாருங்கள், காடு எவ்வளவு அழகாயிருக்கு. இதுக்குள்ளே ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு வாழ்க்கை இருக்கு. இதில யாருமே பெரிய ஆளும் இல்லை, யாரும் சின்ன ஆளும் இல்லை. இந்தக் காடு மிருகங்களோ மனிதனோ உண்டாக்கியது அல்ல, காலம காலமாக இருந்து வருகிற இயற்கை. உங்களாலே பறக்க முடியாது. என்னாலே சின்ன கல்லைக் கூட தூக்க முடியாது. அவரவர்கள் பலம் திறமை அவரவர்களுக்கு. இப்போது கூட ஒன்றும் பிரச்சினையில்லை, நாம் நட்பாக இருக்கிறதா இருந்தா போட்டியே வேண்டாம்' என்றது.

யானை யோசித்துப் பார்த்தது.

குருவி சொல்லுவது சரி தான். நம்மாலே பறக்க முடியாது. குருவியாலே மரத்தைத் தூக்க முடியாது. நாம் ஏன் தேவையில்லாமல் அதனோடு போட்டி போட வேண்டும் என்று நினைத்தது. சே, நான் தான் பெரிய ஆள் என்று திமிராய் நடந்து கொண்டு விட்டேன், நாங்கள் இனி மேல் நண்பர்கள் ஆக இருக்கலாம் என்று சொல்லியது.


குருவியும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டது.

அன்று முதல் யானையும் சிட்டுக் குருவியும் அந்தக் காட்டில் நண்பர்களாக இருந்தார்கள்.

நாம் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், நம்மால் முடியாத ஒரு விஷயம், இன்னொருவரால் லேசாக செய்ய முடியும். அதனால், யாரையுமே நாம் அலட்சியமாக நினைக்கக் கூடாது. எல்லோரிடமும் அன்பாகவும் நட்பாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

கதை கேட்ட பிள்ளைகள் கைதட்டிச் சிரித்தார்கள்.

# அனைத்தையும் தெரிந்து கொண்டு விட்டாயா?



பௌத்த சமயத்தில் பத்து வருடங்கள் ஒரு குருவிடம் கற்றுக் கொண்டால், அதன் பிறகு புதியதாக ஒரு குருகுலத்தைத் தொடங்கி அதன் குருவாக இருக்கலாம் என்கிற நெறிமுறை இருந்தது.

குருவிடம் வந்தான் மாணவன். வரும்போதே அவனிடம் அலட்சியமும் பெருமையும் இருந்தது.

'குருவே இன்றோடு உங்களிடம் படிக்க வந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன' என்றான் மாணவன்.

'அப்படியா?'

'ஆமாம் குருவே. நான் அனைத்தையும் கற்று விட்டேன். இனி நான் தனியாக ஒரு குருகுலம் தொடங்கலாம் என்றிருக்கிறேன்.'

'அப்படியா? எல்லாம் உனக்குத் தெரிந்துவிட்டதா?' அமைதியாய் கேட்டார் குரு.

'எல்லாமே எனக்குத் தெரியும்.'

'அப்படியானால் சரி, உன்னிடம் ஒரே ஒரு கேள்வி'

'ஆமாம்'

'குடையை செருப்புக்கு வலப்புறம் வைத்தாயா? இடப்புறம் வைத்தாயா?'

மாணவன் யோசித்தான். குருவிடமிருந்து சட்டென்று வந்த இந்தக் கேள்விக்கு மாணவன் பதில் சொல்லவில்லை.

'எல்லாம் எனக்குத் தெரியும் என்று சொல்லும் போதே, நீ சரியாகப் பாடம் கற்கவில்லை என்று எனக்குத் தெரிந்துவிட்டது. நீ இந்த குருகுலத்தில் கற்க வேண்டியது நிறைய உள்ளது'என்றார் குரு.

அந்தச் சீடன் அமைதியாக அந்த ஆசிரமத்தினுள் சென்றான்.

# தடையை மீறிய செயலின் விளைவு கைப்பற்றப்பட்ட வலைகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட ஒரு தொகுதி தங்கூசி வலைகள் நேற்று முற்பகல் திணைக்களத்தில் வைத்து எரித்தழிக்கப் பட்டதாக அத்திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குருநகர் மற்றும் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளினால் அண்மையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் தங்கூசி வலைகள் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி முன்னிலையல் எரியூட்டி அழிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதுதவிர மேலும் சட்டவிரோதமாக இவ்வாறு தங்கூசி வலைகளைப் பயன்படுத்துவோரிடம் இருந்து தங்கூசி வலைகளைக் கைப்பற் றும் நடவடிக்கை தீவிரப்படுத்தப் பட்டிரப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது. இலங்கை அரசாங்கத்தினால் இவ்வகை வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பது ஏற்கனவே தடை செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தும் சில மீனவர்கள் இவ்வாறான தொழிலைத் தொடர்ந்து செய்து வருவத அவதானிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (பா)



வடமகாாண தமிழ்த் தின நாட்டுக்கூத்துப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு வவுனியா றம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது...

# குழந்தையை எறிந்த தாய்க்குப் பிணை

(திருநெல்வேலி)

பெற்ற குழந்தையை அநாதரவாக விட்டுச் சென்ற தாய் ஒருவரை யாழ்.நீதிமன்று நேற்றுப் பிணையில் செல்ல அனுமதித்தது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, பாஷையூரைச் சேர்ந்த பெண்ணொருவர் 2 கிலோ 976 கிராம் நிறையுடைய பெண் குழந்தையொன்றைப் பிரசவித்தார். பின்னர் அக்குழந்தையை தேவாயலம் ஒன்றுக்கு அருகில் இருந்த பற்றைக்குள் மறைத்து விட்டு தலைமறைவானார். குழந்தையின் அழுகுரலைக் கேட்ட அப்பகுதி மக்கள் சிலர் விரைந்து வந்து கிராம சேவகருக்கும், பொலிஸாருக்கும் அறிவித்தனர். பொலிஸார் குழந்தையை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் பராமரிப்புப்பிரிவில் அனுமதித்தனர்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி குழந்தையின் தாயார் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். யாழ்.நீதிமன்றில் இவர் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார்.

நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. விசாரணையின் பின்னர் நீதவான் இவரை 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்வதற்கு கட்டளையிட்டு வழக்கை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

43 வயதுடைய இப்பெண்ணுக்கு ஏற்கனவே 21 வயது மற்றும் 19 வயதுடைய இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளார்கள் எனவும், கணவன் வெளிநாட்டில் இருக்கின்றார் என்றும் இப்பெண் தெரிவித்துள்ளார்.

குழந்தையைப் பராமரிப்பதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இடவசதி போதாமலிருப்பதால் அரச சிறுவர் இல்லம் ஒன்றில் அனுமதிப்பதற்கு கோப்பாய் நன்னடத்தை அதிகாரி நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜரானார். (எஸ்,137)

# தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்க மக்கள் எதிர்ப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதிப் பகுதியில் 100 மீற்றர் உயரமுள்ள தொலைத் தொடர்புப் பரிவர்த்தனைக் கோபுரம் அமைக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் கையொப்பமிட்ட மகஜர்கள் யாழ்.மாநகரசபை, குறிப்பிட்ட தொலைத்தொடர்பு நிறுவனம், யாழ்.ஆயர் இல்லம் என்பவற்றிற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

மக்கள் செறிந்து வாழும் பகுதியில் பாரிய தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதனால் உண்டாகும் கதிரலைகளால் ஏற்படும் பாதகங்களைக் குறிப்பிட்டு விழிப்புணர்வு பிரசுரங்கள் அப்பகுதி பொது அமைப்புக்களால் வெளியிடப்பட்டுள்ளன. (52)

## பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் அனைத்து இறுதிப் பரீட்சைகளும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத' காரணத்தினால் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஜூன் மாதம், ஆறாம் திகதியிலிருந்து நடைபெறவிருந்த அனைத்துப் பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன. இதேவேளை கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக திறந்த பல்கலைக் கழகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த பல்கலைக்கழகம் விடுத்துள்ள மற்றுமொரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மாணவிகளுக்கு அதிபர் எம்.எம்.முபாரக் சான்றிதழ் வழங்குவதையும், பதக்கமும், சான்றிதழும் பெற்றுக்கொண்ட மாணவிகளையும் காணலாம். (105)

## பொன்சேகாவின்...

மீதான வழக்குகள் சில தொடர்ந்தும் காணப்படுகின்றன. அத்துடன் அவரது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் ஜெனரல் என்ற நாமம், ஓய்வூதியம் மற்றும் பறிக்கப்பட்ட அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை மீண்டும் வழங்கும்படி ஐக்கிய தேசியக் கட்சி கோரியிருந்தது.

எவ்வாறாயினும், சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்திடம் இது குறித்து தொடர்ந்தும் சரிசனை கொண்டு விசாரணை செய்யுமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன். சரத் பொன்சேகா ஒரு அரசியல் கைதி என்று ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகமும் அறிந்திருக்கின்றது.

பாப்பரசர் 16ஆவது ஆசிர் வாதப்பருக்கு சரத் பொன்சேகாவின் தற்போதைய நிலைமை குறித்து கடிதமொன்றை கடந்த மாதம் 30 ஆம் திகதி இலங்கையிலுள்ள வத்திக்கான் தூதர் அதி வண.ஜோசப் ஸ்பிட்டரி ஊடாக அனுப்பியிருந்தேன். விரைவான பதிலொன்றை எதிர்பார்க்கின்றேன் என்று அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## சனல்-04....

வடபகுதிக்கு யுத்த காலத்திலும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் வெவ்வேறு கடவுச்சீட்டுக்களில் இவர் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டதாக புலனாய்வாளர்களின் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தை கடுமையான விமர்சிக்கும் மற்றுமொரு ஆவணப் படத்தை தயாரிப்பதற்காகவே இவர் இலங்கைக்கு வந்ததாக அதிகாரிகள் நம்புகின்றனர்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் பிறந்த இவர், சனல் - 4 இன் பணிப்பாளர்களில் ஒருவரான ஸ்ருவார்ட் கொஸ்குறோவை திருமணம் செய்துள்ளார். இலங்கைக்கு எதிராக புலம்பெயர்ந்தோர் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் இவர் பிரதான பங்கேற்பதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பில் உள்ள ஆடம்பர ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளதாக கூறப்படும் சிராணி சபாரட்னத்தின் கணவரான ஸ்ருவார்ட் கொஸ்குறோவை பொலிஸார் தேடி வருகின்றனர்.

## பரிந்துரை...

கேள்விக்கு பதில் வழங்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு பதில் வழங்கினார்.

வெளிவிவகார அமைச்சரினால் அமெரிக்க இராஜாங்கச் செயலாளருக்கு ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் செயற்திட்ட அறிக்கை ஒன்று கையளிக்கப்படதா? என அனுரகுமார திஸாநாயக கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அமெரிக்க இராஜாங்க செயலகத்திற்கு விளக்கம் மாத்திரமே அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## ஒரே நேர்...

ஊடாக வெள்ளி பயணிக்க ஆரம்பித்து சிறிது நேரத்தின் பின்னரே இலங்கையர்களுக்கு அதனைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைக்கவுள்ளதாக பேராசிரியர் சந்தன ஜயரத்ன சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறானதொரு கிரக நிலையை 2117 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் திகதி மீண்டும் காணலாம் என அவர் கூறினார்.

இவ்வகையான அரிய சந்தர்ப்பத்தை வாழ்வில் ஒருமுறையே பார்வையிட முடியும் எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் மேலும் குறிப்பிட்டார். இதேவேளை, இந்தக் கிரக மாற்றத்தை வெற்றுக்கண் ஊடாக பார்வையிடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கம்பஹா வைத்தியசாலையின் கண் வைத்தியர் கித்சிறி பண்டார கூறுகின்றார்.

இதனை வெற்றுக்கண்ணால் பார்வையிடுவதால் பல்வேறு பார்வைக் குறைபாடுகள் ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளதாக வைத்தியர் சுட்டிக்காட்டுகின்றார்.

இது தொடர்பில் ஆய்வு செய்பவர்கள் தவிர ஏனையவர்கள் இதனை பார்வையிடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு கம்பஹா வைத்தியசாலையின் கண் வைத்தியர் மேலும் குறிப்பிட்டார்.

## துப்பினால்...

புறம் போன்ற முக்கிய இடங்களில் இவ்வாறு வெற்றிலை துப்புவோர் மீதே தண்டம் அறவிடப்படும் என்று தெரிவித்தார். இவ்வாறான செயற்பாட்டின் மூலம் நகரை அழகானதாக மாற்றியமைக்க முடியும் எனவும் நகரசபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள்....

தொடர்ந்து சில காலத்திற்கு இந்நிலைமை தொடருமானால் நாம் இது குறித்து கவனத்திற்கொள்வோம் என அவர் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பல்வேறு அரச நிறுவனங்கள் செலுத்த வேண்டிய 65 பில்லியன் ரூபாவை இக்கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவது குறித்து திறைசேரி ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## புதைக்கப்பட்ட....

ஏற்பட்டு தாயார் இறந்துள்ளார்.

பிரசவித்த சிசுவை வீட்டில் இருந்து சுமார் 15 மீற்றர் தூரத்தில் உள்ள காணி ஒன்றில் ஒரு அடி ஆழத்தில் கிடங்கு வெட்டி புதைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் திடீர் மரண விசாரணை அதிகாரி உதய சிறியினால் சிசுவின் சடலம் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிசுவின் சடலம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்)

## தூக்கில் தொங்கி இளைஞர் மரணம்

(வேலணை)

காரைநகர் களபூமியைச் சேர்ந்த நல்லதம்பி புஸ்பராசா (வயது-28) என்ற இளைஞர் தூக்கில் தொங்கி மரணமடைதுள்ளார் என ஊர்காவற்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (85)

# அவுஸ்ரேலியாவுக்கு ஆட்கடத்தல் 19 இலங்கைத் தமிழர் சிறையில்



(சிட்னி)

அவுஸ்ரேலியாவுக்கு சட்ட விரோதமாக 2010 ஆம் ஆண்டில் படகுகள் மூலம் இலங்கை அகதிகளை வரவழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக 20 பேர் தண்டனை பெற்றுள்ளனர்.

அவர்களில் 19 பேர் இலங்கை தமிழர்களாவர் என்று பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஏபிசி ஊடகம் தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு சென்று அங்கு அகதி அந்தஸ்து பெற்றவர்களே படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு அகதிகளை வரவழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீண்ட கால நடவடிக்கை குறித்து அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிந்து வைத்துள்ளதாக ஏபிசி ஊடகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 85 பேரைக் கொண்ட படகு அகதிகள் அவுஸ்ரேலிய செல்வதை கரையோர கண்காணிப்பு வானூர்திகள் அவதானித்துள்ளன. இதேவேளை கடந்த சனிக்கிழமையன்று, 87 பேர் அவுஸ்ரேலிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் இந்த மாதத்தில் மாத்திரம் அவுஸ்ரேலியாவுக்குள் பிரவேசித்த படகு அகதிகளின் தொகை 331 ஆக உயர்ந்துள்ளது.

## கைதிகள் பரிமாற்றம் குறித்து நான்கு நாடுகளுடன் உடன்படிக்கை

(கொழும்பு)

கைதிகள் பரிமாற்றம் குறித்து நான்கு நாடுகளுடன் இலங்கை புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

உடன்படிக்கையை செயற்படுத்தும் வகையில் 22 கைதிகள் அவர்களது சொந்த நாடான பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், இந்தியா, மாலைதீவு மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுடன் கைதிகள் பரிமாற்றம் குறித்து இலங்கை புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் முதல் ஆரம்பமாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 பாகிஸ்தான் கைதிகள் ஒப்படைக்கப்படவுள்ளனர். அவர்கள் படிப்படியான அனுப்பி வைக்கப்படுவர். அதற்கான ஆவணங்கள் தயாராகின்றன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய அரபு இராச்சியத்தினால் பேரீச்சைப் பழங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

புனித ரமழானை முன்னிட்டு ஐக்கிய அரபு இராச்சியம் 20 மெற்றிக் தொன் பேரீச்சைப் பழங்களை இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.



குறித்த பேரீச்சைப் பழங்கள் கையளிக்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதுவராலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் மஹ்மூத் முஹம்மத் அல் மஹ்மூத் ஹஜ் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதுவராலய அதிகாரி ஜுமாஹ் அல் டமானியும் கலந்துகொண்டார்.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ள இந்த பேரீச்சைப் பழங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள பள்ளிவாசல்கள் ஊடாக பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

புனித ரமழானை முன்னிட்டு இதுபோன்ற ஒரு தொகுதி பேரீச்சைப் பழங்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தினால் ஒவ்வொரு வருடம் இலங்கை மக்களுக்கு அன்பளிப்பு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புனித பிரதேசமாகும் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலய பகுதி



(கொழும்பு)

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் அப்பிரதேசத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் கொழும்பு மா நகர சபையில் முன்வைத்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தலைமையில் கூடியது. இதன்போதே புனித பூமி பிரகடனத்திற்கான பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய உறுப்பினர் அநுர சுஜீவ, அதி வணக்கத்திற்குரிய புனித பாப்பரசரின் பாதம் பதிந்த தேவாலயம் இதுவாகும்.

இந்நிலையில், இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் கௌரவத்திற்கும் பக்திக்கும் பாக்கியமானது. எனவே அந்தோனியார் ஆலயத்தையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் புனித பூமியாக பிரகடனப்படுத்த வேண்டும்.

இவ்வாறான செயற்பாடு அப் பிரதேசத்தில் உள்ள ஏனைய மத ஸ்தலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. அம் மதஸ்தலங்களும் புனித பூமியில் உள்வாங்கப்படும். என தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி அந்தோனியார் ஆலய திருவிழா இடம் பெறவுள்ளதால் அதற்கு அப்பகுதி பாதைகளை செப்பனிட்டுத் தருமாறும் உறுப்பினர் அநுர சுஜீவ குமார வேண்டுகோள் விடுத்தார்.

## யாழ். சிறுவர் நீதிமன்ற நியாயாதிக்க எல்லை வரையறை



(யாழ்ப்பாணம்)

யாழ். சிறுவர் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

யாழ். நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவின் வேண்டுகோளுக்கமைவாக ஏற்கனவே உறுதியளித்தப்படி யாழ். சிறுவர் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைகளை வரையறுக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் கடந்த மாதம் 18 ஆம் திகதி பிரசுரமாகியுள்ளது.

மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நிரந்தர நீதிபதி ஒருவர் சிறுவர் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்படும் வரை யாழ். சிறுவர் நீதிமன்றத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் யாவும் யாழ். நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜாவின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

மேலும் யாழ். நீதிமன்றில் சமுதாய சீர்திருத்தப் பிரிவினை ஆரம்பிக்க புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதுடன், அதன் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு மன்னார் மற்றும் சாவகச்சேரி நீதிமன்றங்களின் சமுதாய சீர்திருத்தப் பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அனஸ் என்பவரை சமுதாய சீர்த்திருத்தப் பிரிவு திணைக்களம் நியமித்துள்ளது.

மேற்படி இரு விடயங்களும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் உறுதியளிக்கப்பட்ட விதத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தானிய உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு

(கொழும்பு)

அரசாங்கத்தின் தேசிய திவிநெகும மனைப் பொருளாதார வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டில் விளையக்கூடிய பல பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டிருக்கின்றது. அவற்றில் அரிசி, சோளம், எள்ளு குறிப்பிடத்தக்கது.

இதன் பயனாக இந்நாட்டின் நுகர்வுக்கு மேலதிகமாக விளைகின்ற தானியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சோளம் இத்தாலி மற்றும் பெனின் ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட இருப்பதாக சிறுபயிர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சாகுல் ஹமீட் சாதிக்கீன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சோளம் ஏற்கனவே தாய்வானுக்கு முதற்தடவையாக ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற எள்ளை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இத்தாலியும் பெனினும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சோளத்தை கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்திருக்கின்றன.

இதேவேளை இலங்கையில் விளையும் மேலதிக சோளத்தை ஜப்பானுக்கும் கனடாவுக்கும் ஏற்றுமதி செய்யவும் பேச்சுகள் இடம்பெறுவதாகவும் சங்கத்தின் தலைவர் கூறினார். வருடத்திற்கு பத்தாயிரம் மெற்றிக் தொன் சோளத்தை ஏற்றுமதி செய்வதற்கு தாய்வானுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

இதே அடிப்படையில் கனடா, இத்தாலி, பெனின், ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் ஒப்பந்தங்கள் செய்து சோளம் ஏற்றுமதி செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

## பிள்ளைகள் மீது அக்கறை தேவை

(கொழும்பு)

தமது பிள்ளைகள் மீதான முறையான அக்கறையை பெற்றோர்கள் செலுத்த வேண்டும் என பௌத்த சாசன பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அக்கறை செலுத்தாத பட்சத்தில் பிள்ளைகள் தவறான பாதையை நோக்கி பயணிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கந்தளாய் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பிள்ளைகள் தொடர்பாக பெற்றோர் நாளாந்தம் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## காதல் விவகாரம் பருத்தித்துறை பெண் கடத்தல்

கண்டியிலிருந்து வந்த இளைஞர்கள் சிலரால் பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த இளம் பெண் கடத்திச் செல்லப்பட்டு கொடிகாமம் பகுதியில் வைத்து மீட்கப்பட்டிருக்கின்றார்.

எனினும் இந்தச் சம்பவம் ஒரு காதல் விவகாரம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, தும்பளை பகுதியிலுள்ள இளம்பெண்ணொருவரை ஹயஸ் வாகனத்தில் வந்த இளைஞர்கள் சிலர் வாகனத்தில் தூக்கிப் போட்டுக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து குறித்த பெண்ணின் உறவினர் அவசர பொலிஸ் உதவியை நாடியுள்ளனர். இந்த அறிவிப்பையடுத்து உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை கொடிகாமத்தில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளனர். குறித்த பெண்ணுக்கும், கண்டியிலுள்ள ஆணுக்கும் இடையில் ஏற்பட்ட காதலையடுத்து அவர்கள் இருவரின் சம்மதத்துடனேயே இந்த கடத்தல் நாடகம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



படப்பிடிப்பு : சுரேஷ்

**சுவிஸ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள பிரபல கால்பந்து அணிக்கும் மன்னார் மாவட்ட ஆண், பெண் கள் கால்பந்து அணிகளுக்குமிடையிலான சிநேகபூர்வ கால்பந்துப் போட்டி ஒன்று நேற்றைய தினம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் சுவிஸ் அணியும், ஆண்களுக்கான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணியும் வெற்றி பெற்றது. இன்றைய தினம் யாழ். மாவட்ட ஆண், பெண்கள் அணிகள் சுவிஸ் அணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 20)**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.